பக்கங்கள் 12 விலை ரூபா 3-00

''மில்க்வைற் சலவைப் பவுடர்''

நுரைவளம் மிக்கது. சலவையைத் துரிதமாக்கித் துணிகளை தூய வெண்மையாக்குகிறது. சருமத்துக்குத் தீங்கற்றது.

50 வெற்றுப் பக்கெற்றுக்களை அனுப்பி கவர்ச்சியான கைக்குட்டை ஒன்றினைப் பெறுங்கள்.

மில்க்வைற்

யாழ்ப்பாணம்.

(ஏ-584)

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 32 மாசி 20 ஷஃபான் பிறை 6 இதழ் 19

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 04-03-1990

மில்க்வைற்

விற்பனையாளர்களுக்கு ஓர் மகிழ்ச்சியான செய்தி

மில்க்வைற் நீலசோப், மில்க்வைற் பார் சோப் கட்டிவரும் தாள்களைச் சேகரித்து.

100 தாள்களுக்கு ஒரு பெட்சீற் பெறுங்கள், தொடரும் பரிசுத் திட்டம் இது.

மில்க்வைற்

யாழ்ப்பாணம்.

(ஏ-584)

## அமைதிப்படை முற்றுக வெளியேறியதும்

# ஈபிஆர்எல்எவ், ஈஎன்டிஎல்எவ்

# தமிழ் நாட்டில் புகலிடம் கோரமுடியாது?

## 1987ம் ஆண்டு ஒப்பந்தத்தை இந்தியா மதிக்குமென இலங்கை நம்பிக்கை

(லண்டன்)

**இந்திய அமைதிப்படையினர் இலங்கையிலிருந்து முற்றுக வெளியேறியதும் ஈ. பி. ஆர். எல். எவ், ஈ. என். டி. எல். எவ் இயக்கங்கள் தமிழ் நாட்டில் புகலிடம் கோருவதை இந்தியா அனுமதிக்க மாட்டாதென்பதையே இந்தியா நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை கோடி காட்டுவதாக பி. பி. ஸி தெரிவித்துள்ளது.**

இலங்கையின் தன்னுதிக்கத்தையும், இறமையையும் பாதிக்கும் எந்த வடிவிலான பிரிவினை முயற்சிக்கும் இந்தியா ஒருபோதும் ஆதரவளிக்கமாட்டாதென புதுடில்லியில் அதிகாரி ஒருவர் ` தெரிவித்திருந்தார். இதன் மூலம் மேற்படி இயக்கங்கள் தமிழகத்தில் புகலிடம் கோருவதை இந்தியா மறுக்கும் என இலங்கையும் நம்பியுள்ளது.

1987ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் இரண்டாவது விதிமுறையின் '16 ஏ' பிரிவின் கீழ், இந்தியாவின் எந்த ஒரு பகுதியும இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கும், இறைமைக்

(12ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் 88பேர்நேற்று பெற்ரோரிடம் ஒப்படைப்பு!

[யாழ்ப்பாணம்]

''இன்று விடுவிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்களின் சுதந்திர உணர்வை முற்று முழுதாக அடக்கிவிட நினைத்த முன்னுள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அரசு தமிழீழ மண்ணில் துரோகிகள் சிலரை தமக்கு சாதகமாக வைத்துக் கொண்டு ஆடிய கபட நாடகத்தில் சிக்கியவர்கள். இவர்கள் தெரிந்தோ தெரியாமலோ உதவி புரிந்தவர்கள்.''

இவ்வாறு நேற்று மாலை நாச்சிமார் கோவில் முன்றலில் தாமாகவே விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த எண்பத்தெட்டு இளைஞர்களை பெற்ரோரிடம் ஒப்படைக்கும் வைபவத்தில் போராளி இன்பத்தின் தாயார் திருமதி த. இராசையா தலைமை தாங்கிப் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், '' இன்று விடுவிக்கப்படுபவர்கள் தாமாக உணர்ந்து எமது மண்ணையும் மக்களையும் நேசித்து நல் வாழ்வு வாழ

(12ம் பக்கம் பார்க்க)

## அகதிகளை கிறீஸ் பொறுப்பேற்கும்

(ரோம்)

தெற்கு இத்தாலிய துறைமுகத்தில், நிர்கதிக்குள்ளாகியிருக்கும் 54 சட்ட விரோத ஆசிய நாட்டு அகதிகளை கிறீஸ் அரசாங்கம் பொறுப்பேற்கவுள்ளது.

இவ் அகதிகளில் இலங்கை,

(12ம் பக்கம் பார்க்க)

## நாளை திங்கள் முதல் யாழ். மாவட்ட பாடசாலைகள் இரு நேரமாக இயங்கும்

### உதவிப் பணிப்பாளர் அறிவிப்பு

(நமது நிருபர் லச்சி)

யாழ், மாவட்டத்தில் உயர் கல்வி வகுப்புக்களையுடைய சகல பாடசாலைகளும் நாளை திங்கள் முதல் இரண்டுநேர பாடசாலையாக இயங்கவேண்டும் என பிரதேச கல்வித் திணைக்களம் பணிப்புரை வழங்கியுள்ளது,

இப்பணிப்புரையை பிரதேச

(12ம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவுத் துறைக்கு 57 லட்சம் ரூபா ஒதுக்கீடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட அவசர புனர்வாழ்வுப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ், கூட்டுறவுத் துறைக்கு 57 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதியை, இம்மாவட்டத்தில் உள்ள 19 கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## ஆயுதங்கள் மூலம் வெற்றி சாத்தியமாயின் வடக்கு கிழக்கு பிரச்னை எப்பொழுதோ தீர்க்கப்பட்டிருக்கும் - ஜனாதிபதி

(கொழும்பு)

''ஆயுதங்கள் மூலம் வெற்றி காண முடியுமென்றால் வடக்கு கிழக்குப் பிரச்னை எப்பொழுதோ தீர்க்கப்பட்டிருக்கும். அதேபோல ஜே. வி. பி. யினரும் அதிகாரத்துக்கு வந்திருப்பார்கள். சமாதானத்துக்கு உரியபலம் ஆயுதங்களுக்கு இல்லை.''

வாரியபொல, ரஜமகா விகாரையில், கலாசார மண்டபத்தை திறந்துவைத்து ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் பேசுகையில்: ஆயுதபலத்தைக் கொண்டு வென்றெடுக்கப்பட்டயுத்தம் எதுவுமேயில்லை. சகோதரத்துவம் கலந்துரையாடல் என்பவற்றின் மூலம் பெற்றுக்கொண்ட சமாதானமே நிரந்தரமானது

சமாதானத்தை ஏற்படுத்தும் சக்தி ஆயுதங்களுக்கு எப்போதுமே கிடையாது. ஜே. வி. பி இயக்கம் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளவில்லை இவர்சள் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டிருந்தால் பேரழிவுகள் இடம் பெற்றிருக்கமாட்டாது.

(12ம் பக்கம் பார்க்க)

## மருந்து விற்பனையில்போலி ஏஜென்ட் குறித்து அ ، தானமாயிருக்கவும்

### ஆங்கிலமருந்து வர்த்தகர் சங்கம் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

கிராமப் பகுதிகளிலுள்ள மருந்து விற்பனை நிலையங்களில் போலி ஏஜன்டுகள் அதிக கூடுதலான விலைக்கு மருந்து

(12ம் பக்கம் பார்க்க)

## ஈ. பி. ஆர். எல். எவ். வின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 1991வரை எம்.பிக் ‍ களாக இருப்பர்

(திருமலை)

ஈ. பி ஆர் எல். எவ். இன் ஏழு பாராளுமன்ற உறுப்பினர்களும் 1991-ம் ஆண்டு பெப்ரவரி 28-ம் திகதிவரை தொடர்ந்தும் இருப்பார்களென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது 19 அம்சக் கோரிக்கைகளும் நிறைவேற்றப்படாத பட்சத்தில் தமிழீழப் பிரகடனத்தை மேற்படி திகதியில் மேற்கொள்ளவுள்ளதாக கட்சி அறிவித்துள்ளதையடுத்தே பாராளுமன்ற உறுப்பினர்களும் பெப்ரவரி 28-ம் திகதி வரை அங்கம் வகிப்பர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அரசின் அடுத்த நடவடிக்கையை பொறுத்து தமது நடவடிக்கைகளும் இருக்குமென்று மட்டக்களப்பு எம். பி. திரு சம் தமபிமுத்து தெரிவித்துள்ளார். (சி)

## வடக்கு-கிழக்கு மாகாணசபையின் எதிர்காலகூட்டத்தொடர்களை முஸ்லிம்காங். பகிஷ்கரிக்கும் - வரதரின் முடிவுக்கு எதிர்ப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் எதிர்காலக் கூட்டத் தொடர்களைப் பகிஷ்கரிக்கப் போவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

தற்போதைய நிலையைப் பரிசீலிக்க அதன் 17 மாகாண சபை உறுப்பினர்களும் உடனடியாகக் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

(12ம் பக்கம் பார்க்க)

## நாம் தற்போது ஈழத்தின் தேசிய அரசுப்பேரவை உறுப்பினர்கள் - வரதர்

(திருமலை)

''ஈழத்தின தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களாசத் தற்போது நாம் உள்ளோம். அடுத்த ஒரு வருடத்திற்கு மாகாண அரசு ஒன்றை அமைக்கும் முயற்சியில ஈடுபடவுள்

(12ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

(கவசக்கி) Kawasakai K.H. 100மோட்டார்சைக்கிள் எந்த நிலையிலும் வாங்கப்படும பாலேந்திரக்குமார், 'தவ இல்லம்'' அராலி வடக்கு. (சி-3554)

வைத்தியசாலைக்கு உதவியாளராகக் கடமையாற்றுவதற்கு ஒரு பெண் தேவை. 15-3-90ற்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 3564, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [சி-3564]

கல் உடைக்கும் தொழிற்சாலைக்கு தொழிற்சாலையை நடாத்தக்கூடிய அனு''வமுள்ள மனேஜர் தேவை. தங்கும் இடவசதியுண்டு. நற்சாட்சிப்பத்திரத்துடன் நேரில் வரவும் சிவபாதம் கிறசர், சாவகச்சேரி வீதி, புத்தூர். (சி-3535)

கல் உடைக்கும் தொழிற்சாலைக்கு வாச்சர் (காவலாளி) உடன் தேவை. நற்சாட்சி பத்திரத்துடன நேரில் வரவும். தொடர்பு: சிவபாதம் கிறசர், சாவகச்சேரி வீதி, புத்தூர். (சி-3534)

### விற்பனைக்கு

14'' கலர் ரீவி — நஷனல், Funaiடெக்(1000)17''எக்கோ ரீவி கறுப்பு வெள்ளை, டபிள் ஸ்பீக்கர் நஷனல் செற், 2 ஸ்ராண்ட் மின் விசிறி (Fan), 1 ஸ்பீக்கர் செற், கறுப்பு வெள்ளை ரொசிபா ரீவி 17' விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவேண்டிய இடம்: பழமுதிர் சோலை, 377, அரசடிச் சந்தி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி-3560)

உடுவிலில் நல்ல சுற்றுடலில் (பாடசாலை, கோவிலுக்கு அருகில்) நன்னீர்க் கிணற்றுடன், வீடு கட்டுவதற்குகந்த பனைகளுடன் இரண்டு பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. சந்தானகுமார், அம்பலவாணர் வீதி, கற்பொக்கணை, உடுவில். (சி 3533)

### சேவை

கட்டிடத்திற்கான மரத் தேவைகளுக்கும் தளபாடங்களை விற்பதற்கும் வாங்குவதற்கும் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். க. வைரவநாதன், மகாலக்ஷ்மி ரேட்குறாப், 75, மானிப்பாய் வீதி, (ஈழநாடு அருகாமை), யாழ்ப்பாணம். [சி-3561]

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


# அச்சுவேலியில் ஆறரைலட்சம்ரூபா செலவில் உப மின்சார நிலையங்கள்

(அச்சுவேலி)

வலி கிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலக பிரிவில் இரண்டு உப மின்சார நிலையங்கள் ஆறரை லட்சம் ரூபா செலவில் புதிதாக நிறுவப்படவுள்ளது.

புதிய மின்சார நிலையங்களில் ஒன்று அச்சுவேலி தெற்கு பகுதியின் மின்சார விநியோகத்திற்காக அச்சுவேலி ஆஸ்பத்திரிவீதியில் அமைக்கப்படவுள்ளது இது மூன்றரை லட்சம் ரூபா செலவில் நிறுவப்படவுள்ளது.

இரண்டாவது உப மின்சார நிலையம் வளலாய் பகுதி மின்சார விநியோகத்திற்கு வளலாயில் மூன்று லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. இரண்டு உப மின்சார நிலையங்களையும் அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளதாவும் இலங்கை மின்சாரசபை உப மின்சார நிலையத்தை அமைப்பது தொடர்பான வேலையை ஆரம்பிக்க விருப்பதாகவும் அச்சுவேலி உப அலுவலக மின் அத்தியட்சகர் திரு. எஸ் கிருஷ்ணதாசன் தெரி தெரிவித்தார். (74)

## வயல் விழா

(பூநகரி)

பூநகரி நெறபுலவில், உணவு விவசாய நிறுவனத்தின் பாசிப் பயறு உரப்பாவனை மாதிரித் தூண்டல் வயல் விழா அண்மையில் விவசாயத் திணைக்களத்தால் நடாத்தப்பெற்றது

கிளிநொச்சி விவசாய உத்தியோகத்தர் திரு பெரியசாமி, பூநகரி விவசாயப் போதனாசிரியரும், ஜனசக்தி இணைப்பதிகாரியுமான எஸ். இராஜகுலேந்திரன் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

## 500 சாளிக்கு விண்ணப்பம்

(வடமராட்சி)

500 சாளி மோட்டார் சைக்கிளுககு வடமராட்சியிலிருந்து விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

அரசாங்க வர்த்தகக் கூட்டுஸ்தாபான சாளி மோட்டார் சையிக்கிள் விநியோக அறிவித்தலைத் தொடர்ந்து மேற்படி 500 சாளி மோட்டார் சைக்கிளை வாங்குவதற்கு உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இலங்கை அரசாங்கக்கூட்டுத்தாபனத்திற்கு விண்ணப்பித்துள்ளது. (51)

## சமய அறிவுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வேலணை சைவசேவாசங்கம் நடத்திய சமய அறிவுப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:

சமயஅறிவுப்போட்டி கீழ் பிரிவு முதலாம்பரிசு செல்வி ஐ தனகௌரி - சேர் வைத்திலிங்கம் துரைசாமி வித்தியாலயம், வேலணை. இரண்டாம் பரிசு செல்வி ச. சபாநந்தினி வேலணை நடராசா வித்தியாலயம்.

மூன்றும்பரிசு: செல்வி ம. லோகிதா- சைவப்பிரகாச வித்தியாசாலை வேலணை.

மேற்பிரிவு பேச்சுப்போட்டி முதலாம்பரிசு: செல்வி சி. சிவபூசணி - சேர் வைத்திலிங்கம் துரைசாமி வித்தியாலயம் வேலணை.

2-ம் பரிசு: செல்வி இ.ஜெயராணி - வேலணை நடராசா வித்தியாலயம்.

3-ம் பரிசு: செல்வி சி. சிவகாந்தி யாழ்ப்பாணம் இந்து மகளிர்கல்லூரி.

இதனைவிட பத்துபேருக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்பட்டன இவ்விழா வேலணை முடிப்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றது. (12)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சிச்சபைகளில் பணிபுரியும் சிற்றூழியர்களை, எழுதுவினைஞர், தட்டெழுத்தாளராகச் சேர்த்துச்கொள்வதற்கான விண்ணப்பங்களை அமைச்சு கோரியுள்ளது.

இதற்கான அறிவித்தல் பெப்ருவரிமாதம் எட்டாம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இப்பதவிகளுக்கான போட்டிப்பரீட்சை மே மாதம் நாடு பூராவும் நடைபெறும். இதற்கான விண்ணப்ப படிவங்களை ஊழியர்களுக்கு யாழ்ப்பாண மாநகரசபை வழங்கவுள்ளது.

பிறஉள்ளூராட்சி சபைகளில் பணிபுரிவோரும் இவ் விண்ணப்பங்களைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட விசேட ஆணையாளர் மூலம் யாழ்ப்பாண மாநகரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இப்பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசித்தினம் மார்ச் மாதம் பதினைந்தாம் திகதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (12)


## 3-ம் வருட நினைவு அஞ்சலி

நா. தருமராஜா (தவா)



★

தோற்றம் :
08-02-1969

மறைவு :
07-03-1987

திதி : 04-03-1990

★

மறைந்தும் மறையாத குடும்பத்தின் ஒளிவிளக்கே எங்கள் அனைவரது இதயங்களிலும் என்றும் நீங்காத இடம்பெற்ற எங்கள் அன்புச் செல்வமே! நீ எங்களை விட்டுப் பிரிந்து 3 வருடங்கள் சென்றாலும் உனது முகம் எங்களின் மனதில் நிற்குதய்யா! எங்கள் உயிர் உள்ளவரை எங்கள் கண்களில் இருந்து உன் உருவம் மறையவில்லை. உனது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவர் பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா, சகோதரர், சகோதரிகள், நண்பர்கள்

சா. நாராயணசாமி பத்தர்,
132, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-3549)


## சாவகச்சேரியில் நூறு வீதிகள் அமைக்கமுயற்சி

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் நகரசபை ஆணையாளர் திரு. த. நவரத்தினராசா எடுத்த முயற்சினால் இவ் வாண்டில் நூறு வீதிகள் அமைக்கும் முயற்சி மேற கொள்ளப்பட்டுள்ளன.

# யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறிக்கு தெரிவானோர்!

[அச்சுவேலி]

யாழ்ப்பாண பல்கலைக் கழக பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பயிற்சி நெறிவுக்கு (முழு நேரம்) 25 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப்பயிற்சிநெறிக்குத்தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரம்: திரு. ஏ. அரியரத்தினம் போல் வட்டுக்கோட்டை, திரு. எம், அலோசியஸ் யாழ்ப்பாணம், திரு. எம். பாலசுப்பிரமணியம் நோவூட், திருமதி ஆர். ஈஸ்வரன் சுண்டுக்குளி, திருமதி சந்தியா நந்தி.

திரு. பி. கணேஸ் யாழ்ப்பாணம், திரு ஏ. யோசேப்பு நல்லூர், திருமதி எஸ். வி. எஸ். மில்ஸ் சுன்னாகம், திரு. பி.முருகையா கல்லாறு, திரு. ரீ, நாகரத்தினம் யாழ்ப்பாணம்.

திருமதி பெனடிக் யூறலென் திருகோணமலை, திருமதி வை. பூபாலசிங்கம் தொல்புரம், திரு. வி. இராசரத்தினம் முள்ளியவளை, செல்வி வை. இராசேந்திரம் கொழும்பு.6 திரு கே இரவீந்திரன் யாழ்ப்பாணம்.

திருமதி ஏ. ஈ. எஸ். றெசீஸ் மன்னார், திரு. எஸ். சேதுராசா கரவெட்டி, செல்வி எஸ். சிவப்பிரகாசம் திரு. கோணமலை, திரு. எஸ். ஸ்ரீதரன் யாழ்ப்பாணம், திருமதி பி. சுரேஸ் வட்டுக்கோட்டை.

திருமதி எஸ். சுவாமிநாதன் வட்டுக்கோட்டை, செல்வி ஜெ. எஸ். தம்பு சுன்னாகம், திரு.எஸ்.தேவதாஸ் ஏழாலை, செல்வி பி. திருநாவுக்கரசு கரவெட்டி, திரு. எஸ். துரையப்பா கொட்டடி யாழ்ப்பாணம்.

## கோரிக்கை

(கோப்பாய்)

வாதரவத்தை - யாழ்ப்பாணம் பஸ்சேவையை மீண்டும் ஆரம்பிக்கும்படி இப்பகுதி மக்கள் வடபிராந்திய போக்குவரத்துச்சபை முகாமையாளரை மகஜர் மூலம் கேட்டுள்ளனர்.

யாழ். குடாநாட்டிலே போக்குவரத்தை பொறுத்தவரையில் மிகவும் பின்தள்ளப்பட்டநிலையில் காணப்படுகின்றது என்றும் யாழ்ப்பாணம் செல்வதென்றால் சுமார்மூன்று மைல் தூரம் நடந்து புத்தூர் சந்திக்கு வந்தே பஸ் எடுக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது என்றும் பலமுறை இதுபற்றி முறையிட்டும் எதுவித பலனும் கிடைக்கவில்லை. தற்போது எமது பிரதேசத்தின் நிலைமை சுமுகமாபிருப்பதினால் இப் பஸ்சேவையை ஆரம்பிக்குமாறும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பாரம்பரிய காடு வளர்ப்பில் கவனம் செலுத்தவேண்டும்

- கோபி

(கிளிநொச்சி)

''காடுகள் அழிக்கப்படுவதால் நாட்டில் மழை அற்றுப்போகிறது. சூழல்கள் மாசுபடுகின்றன. வணமிருகங்கள் பறவைகள் குறைந்து கொண்டு போகின்றன. பொதுவாக மக்களுக்குத் தேவைப்படும் சுகாதார வசதிகள் இல்லாமல் போகின்றன. அந்த நிலைக்கு முடிவு ஏற்படவேண்டும்''

இவ்வாறு கிளிநொச்சி வன பரிபாலனசபை இலகாவில் நடைபெற்ற கருத்தரங்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க மாவட்ட அரசியல் பொறுபாளர் கோபி பேசுகையில் கூறினார்.

திரு. கோபி மேலும் பேசுகையில் ''அதிகாரிகள் வன் செயல் நடவடிக்கைகளை காட்டி, மரநடுகைகள் மேற்கொள்ளாமல் இருப்பது கவலை அளிப்பதாகும். எமது பாரம்பரிய காடு வளர்ப்பில் உடனடியாக நாம் கவனம் செலுத்துவது முக்கியமான விடயம். இதற்கு நாம் உங்களுக்கு ஒத்துழைப்பு தருவோம்'' என்றும் குறிப்பிட்டார். 83 ம)

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையிலிருந்து 5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டுவிழா இன்று காலை மேற்படி பாடசாலை அதிபர் திரு. சி. நா. நடேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக மருதனமடம் கோட்டக் கல்வி அதிகாரி திரு. க. குலசேகரமும் சிறப்பு விருந்தினராக ஏழாலை கொத்தணி அதிபர் திரு. ரி. டானியலும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# எமது போராட்டம் அடுத்த சந்ததியினருக்காக மாறிக்கொண்டிருக்கிறது

- சூசை

(வேலணை)

''எங்களை பயங்கரவாதி என்று அழைத்த ஸ்ரீ லங்கா அரசு இன்று விடுதலைப்போராளிகள் என்று அழைக்கின்றார்கள் இதே நேரத்தில் எமது பேச்சுவார்த்தைகள் இராஜதந்திர ரீதியில் நடைபெற்று வருகின்றது நாம் அங்கு செல்லும்போதும் பல வீனமான முறையில் செல்லவில்லை ஆயுதங்களுடன்தான் செல்கின்றோம்''

விடுதலைப்புலிகளின் தீவுப் பகுதி பொறுப்பாளர் திரு, சூசை கரம்பன் காளிகோவில் முன்றலில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்,

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் ''எமது போராட்டமானது அடுத்த சந்ததியினருக்காக மாறிக்கொண்டிருக்கின்றது. எமது இளம் சிறுர்கள்தான் இப்போது போராடிக்கொண்டிருக்கின்றார்கள்.

இந்த மண்ணையும் மக்களையும் காப்பற்ற இந்த மண்ணில் பிறந்த இளைஞர்கள், யுவதிகள் பங்கேற்கவேண்டியது அவசியமாகின்றது எமது தமிழ் ஈழ விடுதலைப் போராளிகள் மரணத்தையே சுமந்து கொண்டே வாழ்கின்றார்கள். நாமும் புதிய அணுகுமுறையில் செயலாற்றிவருகின்றோம்.

## பொதுக்கிணறுகள் திருத்தப்படுகின்றன

[மானிப்பாய்]

யாழ். மாவட்டத்தில 26 பொதுக்கிணறுகள் தற்போது திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றன. [71]

## மடுத்திருப்பதியில் பங்குனி திருவிழா

(யாழ்ப்பாணம்)

மருதமடு திருப்பதியில் இம்மாதம் 10ம், 15ம் திகதிகளில் இரு திருவிழாக்கள் மன்னார் ஆயர் அருட்திரு தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் தலைமையில் நடைபெறவிருக்கிறது. நாட்டில் சுமூகநிலை ஏற்பட்டுள்ளதால் தமிழ் - சிங்கள யாத்திரிகர் இம்முறை வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## விடுதலைப் புலிகளுக்கு விதிவிலக்கு

[கொழும்பு]

ஆயுதங்களை ஒப்படைப்பது சம்பந்தமாக அரசு விடுத்துள்ள காலக்கெடுவிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது என்று வெளியுறவு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தினநேற்றுமுன் தினம் கொழும்பில் அறிவித்துள்ளார்.

## மங்கோலியாவிலிருந்து
# 1992-ம் ஆண்டிற்குள் சோவியத்படை
# விலக இருநாடுகளும் இணக்கம்!

(மாஸ்கோ)

**மங்கோலியாவிலிருந்து 1992-ம் ஆண்டிற்குள் சகல சோவியத் துருப்புகளும் வெளியேற வேண்டும் என்று சோவியத் யூனியனுக்கும், மங்கோலியாவிற்குமிடையில் உடன்பாடு ஒன்று காணப்பட்டுள்ளது.**

சோவியத் யூனியன்-மங்கோலிய அதிபர்களுக்கிடையில் அண்மையில் நடைபெற்ற பேச்சுவார்தையொன்றிலே இந்த உடன்பாடு காணப்பட்டது.

இரு தலைவர்களுக்குமிடையிலான பேச்சுவார்த்தையை அடுத்து சோவியத்தின் தாக்குதல் படைகள் யாவும் 1991ம் ஆண்டிற்கு முன்னர் வெளியேறவேண்டும் என்றும் படைவிலகலை மேற்பார்வை செய்யும் இராணுவத்தினர் 1992 ம் ஆண்டிற்குள் வெளியேற வேண்டும் என்றும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஆசியாவிலிருந்தும், ஐரோப்பாவிலிருந்தும் சுமார் ஐந்து லட்சம் படைவீரர்களை சோவியத் யூ[illegible] வ[illegible]ஸ் பெறும் என்று 1988 ம் ஆண்டு அதிபர் கொர்பசேவ் குறிபபிட்டிருந்தார்.

இப்படைவிலகலில் மங்கோலியாவிலுள்ள ஐம்பதினாயிரம் துருப்புகளும் அடங்குகிறார்கள். (து)

## சீமெந்து ஆலை ஊழியர்களின் சோர்வுச் சம்பளத்தை கொடுங்கள்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் முன்னர் காங்கேசன்துறை சிமெந்து ஆலையில் பணிபுரிந்த ஊழியர்களின் சோர்வுச் சம்பளத்தை மீண்டும் பெற்றுக்கொடுக்க இறுதி நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இந்தப்பிரச்சனை சம்பந்தமாக 'ஒம்புட்ஸ்மன்' விசாரணையில் சோர்வுப்பணம் கட்டாயம் வழங்கப்பட்டிருந்தும் அதனை தொழில் இலாகா மூலம் வழங்கலாமெனவும் தீர்வு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் கூட்டுஸ்தாபனம் மீண்டும் ஊழியர்களை கணக்குகளை அனுப்புமாறு கோரியிருந்தது.

இக்கோரிக்கைக்கு மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் இதற்கான தீர்வு வழங்கப்படடுவிட்டதால் ஊழியர்களை அதனை அனுப்பத்தேவையில்லையென கோரிக்கை விடுத்துள்ளது. இதற்காக சங்கம் தடை உத்தரவொன்றை கொழும்பு மேல்முறையீட்டு நீதிமன்றில் விரைவில் தாக்கல் செய்யவுள்ளது. (12)

## தற்கொலை

(மன்னார்)

கணவர் சம்பளத்தில் 200 ரூபாவை மறைத்து மிகுதியை மனைவியிடம் கொடுத்ததில் ஏற்பட்ட மன விரக்தியில் மனைவி மண்ணெண்ணெயை தமது உடம்பில் ஊற்றி தீமூட்டி தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் பேசாலையில் நடைபெற்றது மூன்று பிள்ளைகளின் தாயான இவருக்கு 27 வயது உடல் முழுவதும் எரிந்து குற்றுயிராக மன்னார் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லும் வழியில் மரணமானார்.

## ஜம்மு காஷ்மீரில் கலவரம்; இராணுவம் சுட்டு 47பேர்பலி

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலவரங்களில்இராணுவத்தினர்சுட்டதில்47 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். மாநிலத்தின் பெரும் பகுதிகளில் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றில் பங்கு பற்றியவர்கள் பஸ் ஒன்றில் வரும்போது அவர்கள் மீது சுட்டதில் 47 பேர் பலியானதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி சம்பவத்தை பாகிஸ்தான் வன்மையாக கண்டித்துள்ளது. தற்போது இரு நாடுகளிடையேயும் இச்சம்பவம் தொடர்பாக பெரும் பதற்றம் தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## உள்ளூர்ப் பாடசாலைகளில் கல்விக்கு நம்பிக்கை வையுங்கள்

(அச்சுவேலி)

"நகரப் பாடசாலைகளில் நம்பிக்கைவைத்து அளவுக்கதிகமான பொருட்செலவுடன் அலைவதைவிடுத்து உள்ளூரில் உள்ள பாடசாலைகளில் நம்பிக்கைவைத்து அவற்றை முன்னேற்ற வேண்டும். இந்த நம்பிகை சமூகத்தில் இருந்த காலத்தில் உள்ளூர் பாடசாலைகள் முன்னேற்றமடைந்தன."

மருதனுமடம் கோட்டக் கல்வி அலுவலக கல்வி அதிகாரி திரு. பொ. சிவகுருநாதன் இவ்வாறு கூறினார்.

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியின் சிரேஷ்டபிரிவு இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு திரு சிவகுருநாதன் தொடர்ந்து உரையாற்றும்போது புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் கல்வி கற்ற பலர் உயர் பதவி வகிக்கின்றனர் சர்வதேச நிறுவனங்களில்கூட உயர்பதவி வகித்து புத்தூர் சோமஸ்கந்தாவின்

(10ம் பக்கம் பார்க்க)

## தனியார் மருத்துவ கல்லூரிகளுக்கு தடை விதிக்குமாறு கோரி
# தமிழகத்தில் மறியல் போராட்டம்
## மாணவர்கள் கைதாகி விடுதலை

(சென்னை)

தமிழகத்தில் சென்னை உட்பட பல்வேறு பகுதிகளிலுள்ள மருத்துவக் கல்லூரிகள் முன்பு மறியல்போராட்டம் நடத்த முயன்ற ஆயிரத்துக்குமதிகமான மருத்துவக் கல்லூரி மாணவர்கள், பயிற்சி மருத்துவர்கள் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்

சென்னைநகரில் மட்டும் 150 பெண்கள் உட்பட சுமார் 700 மாணவர்கள் கைதுசெய்யபட்டனர்.

தனியார் மருத்துவக்கல்லூரிகளுக்கு தடைவிதிக்கவேண்டுமென்று கோரியே மாணவர்கள் இவ்வாறு மறியல்செய்ய முயற்சித்தார்கள்.

மருத்துவக் கல்லூரி வியாபாரமாக பாறிவருவதாக குறிப்பிட்ட மாணவர்கள் தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு தடை விதித்து சகல தனியார் மருத்துவக் கல்லூரிகளையும் அரசு தனது பொறுப்பில் எடுக்கவேண்டும் என்றும் தமிழக அரசிற்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த புதன்கிழமைமுதல் பகிஷ்கரிப்பு நடத்திவந்த மாணவர்கள் நேற்று முன்தினம் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி மறியல்போராட்டத்தில் இறங்கினார்கள்.

### கருணாநிதி கோரிக்கை

மருத்துவ மாணவர்களது கோரிக்கைகளை நிறைவுசெய்ய அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுத்துவருவதாகவும், மாணவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டு கல்லூரிகளுக்குத் திரும்பவேண்டும் என்றும் தமிழக முதல்வா கலைஞர் மு. கருணாநிதி மாணவர்களைக் கேட்டுக்கொண்டார்.

மருத்துவக்கல்லூரிகளை தனியார் நடத்துவதற்கு அனுமதிப்பதில்லை என்ற தமது அரசின் கொள்கையையும் திரு. கருணாநிதி சுட்டிக்காட்டினார்.

போராட்டம் நடத்திவரும் மருத்துவக்கல்லூரி மாணவர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்களை மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் பொன்மொழி நேரில் சந்தித்து மாணவர்களது கோரிக்கைகளை தமது அரசு நிறைவேற்றும் என்று தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து மாணவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டு கல்லூரிகளுக்கு திரும்புவதாகத் தெரிவித்தனர். (து)

# 'வர்த்தகக் கல்வி வாழ்க்கைக்குரியது'
## - செல்வி தி. பெரியதம்பி

(உடுவில்)

"வர்த்தகக்கல்வியைபலரும் பலநோக்கங்களுக்காக கற்கின்றனர். வர்த்தகக் கல்வி வாழ்க்கைக்கு அத்திபாரமானது, சமூக பொருளாதார வளர்ச்சிக்கு பயன்படக்கூடிய கல்வி. எனவே வாழ்க்கைக்குரிய இக்கல்வியைப் பயில்வதன்மூலம் சமூகத்தில் உயர்ந்தநிலையையும், பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றத்தையும் அடையமுடியும்."

இவ்வாறு மருதனுமடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற வர்த்தகப்பாட கண்காட்சியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதமபி கூறினார்.

வர்த்தக ஆசிரிய, மாணவர் ஒன்றியம் (மானிப்பாய், காங்கேசன்துறை வட்டாரங்கள்) ஒன்றிணைந்து நடாத்திய கட்புல சாதன கண்காட்சியை வர்த்தகபாட ஆசிரிய ஆலோசகர் திரு. க.கதிரமலைஒழுங்கு செய்திருந்தார்ர்.

வர்த்த ஆசிரிய மாணவர் ஒன்றியத் தலைவர் திரு. அ. ஜெயபாலரட்ணம் தலைமையில் நடைபெற்ற இக் கண்காட்சிக்கு பல பாடசாலைகளிலிருந்தும் கட்புல சாதனங்கள் கொண்டுவரப்பட்டிருந்தன. கட்புல சாதன கண்காட்சியினை மருதனுமடம் கோட்டக்கல்விநிலைய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். கே. குலசேகரம் திறந்து வைத்தார். வட்டாரக் கல்வி அதிகாரி (வர்த்தகம்) திரு. எஸ். சிவராசா மங்களவிளக்கேற்றி வைத்தார்.

மருதனுமடம் கோட்ட நிலைய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். கே. குலசேகரம் உரையாற்றுகையில்; "கட்புல சாதனங்களை பாவிக்கும் பழக்கம் இப்போது பாடசாலைகளில் அறவே நடைபெறுவதில்லை. அரசாங்கம் பல லட்சம் ரூபா செலவில் செய்து வழங்கும் கட்புல சாதனங்கள் மாணவருக்கு தெரிவதில்லை. ஆசிரியர்கள் கட்புல சாதனங்களை பாடசாலையில் கட்டாயம் கையாளவேண்டும்'' என்றார்.

வர்த்தக பாட கல்வி அதிகரரி திரு. எஸ். சிவராசா பேசுகையில்; "வகுப்புக்களில் பல மணிநேரம் விரிவுரைகள் நிசழ்த்தி பாடத்தை போதிப்பதிலும் பார்க்க சாதனங்களை பயன்படுத்திக் கற்பிப்பதன் மூலம் எளிதாக விடயத்தை மாணவர் மனதில் பதியவைத்துவிடலாம்'' என்றார். (109)

## வடக்கு, கிழக்கில் மீனவர் கூட்டுறவு சங்கங்கள் உருவாக்கப்படும்

(திருமலை]

உதவி ஆணையாளர் மட்டத்தில் கோட்ட மீனவர் கூட்டுறவுச்சங்கங்களை உருவாக்க வடக்கு-கிழக்கில் நடவடிக்கைஎடுக்கப்பட்டுவருகிறது.

68 உதவி ஆணையாளர் பிரிவுகளில் குறைந்த பட்சம் 100 அங்கத்தவர்களைக் கொண்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் விரைவில் உருவாக்கப்படும். மீனவர்களின் குறைபாடுகளை நீக்குவதறகுரிய நடவடிக்கைகளை எடுப்பது மாத்திரமன்றி ஏற்படும் நன்மைகள் உண்மையாகவே மீனவரைச் சென்றடைய வழிசெய்யப்படும்.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களூடாக உற்பத்திகளைச் சந்தைப்படுத்தல், தொழில் வாய்ப்பையும், வருவாயையும் அதிகரித்தல், கடன் வசதிகளை அதிகரித்தல், மீனவர்களிடம் சிக்கனமனோபாவத்தை ஏற்படுத்தி சேமிப்பைத் தூண்டுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதேவேளை மீனவர் கிராமங்களின் சனசமூக நிலையங்களும், பிள்ளைப்பராமரிப்பு நிலயங்களும் ஏற்படுத்தப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## தவக்கால நற்சிந்தனை

### துன்பங்களை பொறுமையுடன் ஏற்போம்

கிறிஸ்து பெருமானின் உயிர்ப்பு விழாவாகிய பாஸ்கா விழாவின் கடந்து செல்லுதலின் முன்றுவது கட்டம் சாவிலிருந்து வாழ்வுக்கு, சிறப்பாக நித்திய வாழ்வுக்குக் கடந்து செல்வதே.

மரணம் என்றவுடன் நாமனைவரும் ஒருவித திகிலும் அச்சமும் அடைகின்றோம். கற்பனைக் காவியங்களிலும் கட்டுக் கதைகளிலுமேயன்றி உலக வரலாற்றில் சாவுக்குப் பயப்படாதவர், பணியாத மனிதர் எவருமே இருந்ததில்லை. ஆகவே நான் சாவது திண்ணம், அதிலிருந்து தப்பவே முடியாது. எனவே தவிர்க்க முடியாத தொன்றை வீரத்துடன், துணிவுடன் எதிர்கொள்ள நான் தயார் நிலையிலிருந்தேனுமில் சாவுக்கும் பயப்படத் தேவையில்லை. எப்போ, எங்கே, எப்படி? என க்குச் சாவுவருமென்பது எனக்குத் தெரியாததொன்றாகையால், அது எப்பொழுது வந்தாலும் அதை அரவணைக்க நான் ஆயத்தமென்ற நிலையில் வாழவேண்டும். அப்பொழுது தான் கிறிஸ்துவைப் போல் நானும் அவருடன் சாவிலிருந்து நித்திய வாழ்வுக்குக் கடந்து செல்ல முடியும். அதற்குக் கிறிஸ்துவைப் போன்று என் வாழ்வில் நிகழும் பாடுகளை துன்பங்களை, வேதனைகளை எல்லாம் இன்முகத்துடன் பொறுமையுடன் ஏற்றுக் கொள்ளப் பழக வேண்டும்.

நான் மட்டும் வாழ்ந்தால் போதாது. என்னைச் சுற்றி வாழும் ஏனைய சகோதர சகோதரிகளுக்கும் சிறப்பாக ஏழைகளுக்கு உயிரளிக்கவேண்டியது எனது தலையாய கடமை. அநீதிகளுக்கும் அட்டூழியங்களுக்கும் அடிமைகளாக்கப்பட்டு பல்லாயிரக் கணக்கில் மக்கள் செத்து மடிவதை நான் கண்டும் கண்மூடித்தனமாக இருப்பது நியாயமா! பொய்மை அநீதி, பகைமை, பிரிவினை, தன்னலம், இவையனைத்தும் செத்து மடியநான் என்ன செய்கிறேன் என அடிக்கடி இத்தவக்காலத்தில் என்னைக் கேட்டு, சிந்தித்துச் செயலாற்றினேனுகில் இப்புனித காலம் என்வாழ்வில் ஒரு சிறப்பான பிரயோசனமான காலமாக அமையும்.

லோ. வ. இராயப்பு, மா. ம. தி

## "பாலர் பாடசாலைகள் நல்லபிரஜைகளை உருவாக்கும் அத்திரவாரமாக அமைகிறது"

- பேராசிரியர் கா. சிவத்தம்பி

(மட்டுவில்)

"பாலர் பாடசாலைகள் ஒரு நாட்டில் நல்ல பிரஜைகளைக் உருவாக்கும் அத்திவாரமாக அமைகிறது. இந்த பாலர் பாடசாலை பற்றிய அரச நடவடிக்கைகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன"

இவ்வாறு அறவழி பாலர் பாடசாலை ஆசிரியர்களின் நாலாம் கட்ட பயிற்சி ஆரம்ப வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரைநிகழ்த்திய அகதிகள் புனர்வாழ்வு கழகத்தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி கூறினார்.

அறவழி போராட்டக் குழுவின் காந்தி நிலைய அரங்கில் தலைவர் திரு. எஸ். துரைராஜா தலைமையில் ஆரம்பமான இந்த வைபவத்தை வைத்தியமணிபேதுரு பிலிப்ஸ் ஜே மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

அறவழி கல்வி இயக்குநர் திரு. கே. கோபாலகிருஷ்ணன் நோக்க உரைநிகழ்த்தினர்.

பேராசிரியர் சிவத்தம்பி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- அறவழி போராட்டகுழு ஒரு அரசாங்க நிறுவனமாக இல்லாமல்இருந்தும் கூட இந்த நாட்டிலுள்ள பாலர்களின் கல்வியில் பெரும் பங்கை வகிக்கிறது என்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

இங்கு பயிற்சி பெறும் ஆசிரியர்கள் இந்த ஆசிரியத் தொழிலைத் தமது ஊதியத்தை எதிர்பார்த்துச் செய்யும் தொழிலாகக்கருதாமல் ஒரு இளம் சமுதாயத்திற்குச் செய்யும் தொண்டு மனப்பான்மையுடன் செய்ய வேண்டும் அப்பொழுதுதான் சமுதாயத்தில் நல்ல முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியும்.

பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு தம்மிடம் கல்வி பயிலும் பாலகர்களின் தேவை நிலைகள் பற்றிய அறிவு இருப்பது அவசியம். அதுமட்டுமல்ல இந்த குழந்தைகளின் பெற்றோர் பற்றிய நிலைப்பாடுகளையும் அறிந்து கொள்ள வேண்டிய நிலையில் இருக்கவேண்டும் என்றுர்.

அறவழி போராட்டக் குழு செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் நன்றியுரை நிகழ்த்தினர். (82)

### விபரங்கள் சேகரிப்பு

(சித்தன்கேணி)

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் விதவைகள், அநாதைகள், வலுவிழந்தவர்கள் ஆகியவர்களுடைய விபரங்கள் திரட்டப்படுகின்றன.

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 25 கிராம சேவை அலுவலர்கள் பிரிவிலும் அவ்வப் பகுதி கிராமசேவை அலுவலர்களூல் விதவைகள், அநாதைகள் வலுவிழந்தவர்கள் ஆகியவர்களுடைய விபரங்கள் திரட்டப்படுகின்றன.

### தென்மராட்சி வழமைக்கு திரும்பியது

(சாவகச்சேரி)

இந்திய இராணுவம் வெளியேறியதைத் தொடர்ந்து தென் மராட்சியிலும் நிலைமை வழமைக்கு திரும்பியுள்ளது.

இரவு ஒன்பது மணிவரை கடைகள் திறக்கப்பட்டும் அதிகாலை நான்கு மணிக்கே கடைகள் ஆரம்பிக்கப்பட்டும் வர்த்தகம் சுமுகமான நிலையில் நடைபெறுகிறது. இ.போ.ச. பஸ் வண்டிகள் கிரமமாக ஓடுகின்றன. பலகாலம் இல்லலாதிருந்த கொடிகாமத்திலிருந்து மீசாலை வேம்பிராய் ஊடாக செல்லும் இ போ.ச. பஸ் வண்டி இவ்வாரம் முதல் மீண்டும் சேவையிலீடுபடவுள்ளது.

## ஆசிரியர் பயிலுநர் பெயர்ப் பட்டியல் அனுப்பகோரிக்கை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலக பிரிவைச் சேர்ந்த சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பழை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து பயிலுநர் ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்டவர்கள் அவ்வப்பகுதி கொத்தணி அதிபர்கள் தத்தமது பாடசாலைகளில் கற்பிக்க பொருத்தமானவர்களாக இருப்பின் அவர்களின் பெயர்ப்பட்டியலை தமக்கு அனுப்பிவைக்குமாறு பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தம் கேட்டுள்ளார்.

ஆசிரியர் பயிலுநர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமனம் வழங்கும் போது அவர்களுக்கு பொருத்தமான இடங்களுக்கு நியமனம் வழங்குவதற்கு இது அனுசரணையாக இருக்கும் என்பதை கருத்திற்கொண்டு இவ்வாறுன பெயர் பட்டியலை தமக்கு தந்து உதவுமாறு திரு. சிவானந்தம் தமது பிரிவைச் சேர்ந்த கொத்தணி அதிபர்களை கேட்டுள்ளார். (72)

## "பாதிக்கப்பட்ட மாணவர் விளையாட்டு துறையில் எப்படி நூறுபுள்ளி எடுக்கமுடியும்"

(கோப்பாய்)

"அண்மையில் நடைபெற்ற பயிலுநர் ஆசிரியர் தெரிவில் யாழ் குடாநாட்டைச் சேர்ந்தவர்களுக்கு விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரையில் உச்சப்புள்ளியான நூறு புள்ளி எவருக்குமே கிடைத்திருக்காது என்றே கருதுகின்றேன்."

இவ்வாறு கோப்பாய்-வடக்கு ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற கோப்பாய்-வடக்கு சரவணபவானந்தா வித்தியாசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கோப்பாய் கொத்தணிப் பாடசாலை அதிபர் பூ. க. இராசரத்தினம் தெரிவித்தார்.

திரு. இராசரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது; "கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்ட எமது பாடசாலை மாணவர்கள் தேசிய விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்ளமுடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இந்தக் காலப் பகுதியில் படித்தமாணவர்கள் எப்படி இவ்வாசிரிய பயிலுநர் தெரிவில் நூறு புள்ளிகளைப் பெற்றிருக்கமுடியும்."

வருங்காலத்தில் விளையாட்டுத்துறையில் ஆர்வமுள்ளவர்கள் கட்டாயமாகத் தேசிய விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றக்கூடியவர்களாக மாறவேண்டும்" என்றுர்.

இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் நாவலர் இல்லம் 346 புள்ளிகளைப்பெற்று முதலாம் இடத்தைப் பெற்று இரண்டாம் மூன்றும் இடங்களை முறையே இராமநாதன் இல்லம், இராஜரட்ணம் இல்லம் என்பன பெற்றன.

## ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் கோட்டக்கல்வி 'அதிகாரி பண்டத்தரிப்பில் சந்திப்பு!

(பண்டத்தரிப்பு)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் குழுவொன்று கடந்த புதன்கிழமையன்று பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அலுவலக உதவி கல்விப் பணிப்பாளரை அவரது அலுவலகத்தில் சந்தித்து ஆசிரியர்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடாத்தியது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் தலைமையில் சங்கத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு. எஸ். பஞ்சலிங்கம் சங்கத்தின் வட்டுக்கோட்டைக் கிளைத்தலைவர் திரு. பொ. கந்தசாமி, வட்டுக்கோட்டை கொத்தணி அதிபர் திரு.எஸ். தாஸ் ஆகியோர் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர்.

நீண்ட காலமாக பாடசாலைகளில் பதில் அதிபர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு அதிபர்களாக நியமனம் வழங்குதல், மலைநாட்டு தோட்டப்பாடசாலைகளில்கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு புதிய சம்பளத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவது உட்பட மற்றும் பல்வேறு விடயங்கள் குறித்து பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அலுவலக உதவி கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தனுடன் இக்குழுவினர் பேச்சுவார்த்தை நடத்தியதாக அறிவப்படுகின்றது. (72)

### புலிகள் மக்கள் சந்திப்பு

(புங்குடுதீவு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படைப் பிரிவினர் புங்குடுதீவு மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

புங்குடுதீவு 'மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடல் திரு. ஐ. சண்முகநாதன் தலைமையில் நடைபெறறது.

### கொம்பியூட்டர் தமிழ் நூல்

(யாழ்ப்பாணம்)

கொம்பியூட்டர் சம்பந்தமான முதல தமிழ்நூலொன்று யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலை காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்ஸ்தாபனப் பயிற்சிப் பொறியியலாளரும், சென். பற்றிக்ஸ் தொழில் நுட்பக் கல்லூரிப் பகுதிநேரக் கொம்பியூட்டர் விரிவுரையாளருமான திரு எஸ். சுந்தரராஜன் வெளியிட்டுள்ளார். (12)

### தமிழுக்கு முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். 1ம் குறுக்குத் தெருவிலுள்ள வடமாகாண கடற்தொழிலாளர்களின் சங்கங்களின் சமாசத்தின் கீழுள்ள பனிக்கட்டி ஆலையின் பெயர்ப் பலகையின் மேல்பகுதி தமிழிலும் கீழ்ப்பகுதி ஆங்கிலத்திலும் எழுதப்பட்டுள்ளது.

கடந்தகால வெல் தாக்குதலினுல் முந்திய ஆங்கிலத்திலுள்ள பெயர்ப்பலகை முற்றுகச் சேதமடைந்தது குறிப்பிடத்தக்கது. (ம)

### கொள்ளை

(நெல்லியடி)

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க அல்வாய் தெற்குக் கிளை உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்தமாதம் 4ம்திகதி இரவு நடைபெற்ற இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கமலச்சேவை நிலையங்களில் இரண்டு சில்லு உழவு யந்திரங்கள்

(யாழ்ப்பாணம்)

அகதிகளுக்கான ஐ நா. உயர் ஸ்தானிகராலயத்தினல் யாழ். கமநல சேவை நிலையங்களுக்கு ஆறு உழவு யந்திரங்கள் முன்பு வழங்கப்பட்டிருந்தும், அதன் உபகரணங்கள் கிடைக்காமையால் பாவனைக்கு விடப்படாமலிருந்தது.

இப்பொழுது அந்த உபகரணங்கள் அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயம் வழங்கியுள்ளபடியால் யாழ். மாவட்டத்திலுள்ள விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று கமநல சேவை நிலையச் சிரேஷ்ட ஆணையாளர் தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் யாழ் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கமநலச் சேவை நிலையங்களுக்கு இரண்டு சில்லு உழவு யந்திரம் வீதம் வழங்கப்பட ஏற்பாடாகியுள்ளது. [ம]

## 'சமய பக்தியை உண்டுபண்ண அறிவுப் போட்டி அவசியமானது"

(தென்மராட்சி)

"இளம் சமுதாயத்தில் நற்பழக்க வழக்கங்களையும் சமய பக்தியையும் உண்டுபண்ண சமய அறிவுப்போட்டிகளை இளைஞர் மத்தியில் நெறிப்படுத்துவது மிகவும் வரவேற்கத் தக்கது" என்று சரசாலை இந்து இளைஞர் மன்றம் நடத்திய சமய அறிவுப் போட்டி பரிசளிப்புவிழாவிற்கு தலைமைதாங்கிப் பேசும்போது டாக்டர் ச. நமசிவாயம் தெரிவித்தார்.

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் நடந்த இவ்விழாவில் இளைஞர்சேவை அதிகாரிகள் திரு கு பரராசசேகரம், திரு க. உருத்திர

(9-ம் பக்கம் பார்க்க)

ஈழநாடு வாரமலர்
EELANADU VARA MALAR

## நமது பார்வையில்...

# கல்வி எதற்கு?

கல்வி எதற்கு? வெறும் அறிவை மாத்திரம் வளர்ப்பதற்கா? மனிதப் பண்பை வளர்க்காத கல்வி யாற் பயனேது?

''அரம் போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்
மக்கட் பண்பில்லாதவர்''

என்று தானே வள்ளுவரும் இடித்துரைக்கின்ருர்!

போட்டிப் பொருளாதாரம் வளர்ந்துவிட்ட இந்த நாளில், தொழில் நுட்பம் வளர்ந்துவிட்ட இந்த யுகத்தில், மனித ஆற்றலை வளர்ப்பதே கல்வி என்பது வேறு சிலர் வாதம். ஆற்றல் மிக மிக அவசியம். ஆனல் அது மட்டும் போதுமா?

அறிவை மாத்திரம் வளர்த்தால் போதாது; ஆற்றலை மாத்திரம் வளர்த்தால் போதாது; பிறரும் வாழ வேண்டும் என்ற மனப்பாங்கை, சமுதாயத்தில் உயர்ந்த விழுமியங்களை-பண்புகளை-வளர்க்கும் கல்வியே வேண்டும். பெற்ற அறிவு பிறரையும் வாழவைக்கக்கூடிய சிந்தனைகளை-பயனுள்ள கருத்துக்களை-வெளியிட உதவிட வேண்டும்.

''சொல்லடி சிவசக்தி எனைச்
சுடர்விடும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே''

இது பாரதியாரின் சிந்தனை. அவர் அறிவு சுடர்விட்டதேன்? அவர் சிந்தனை-கருத்து-கவி-எல்லாமே-சமுதாய உயர்ச்சி பற்றியது. வெறும் இன்ப மயக்கத்தை மாத்திரம் ஏற்படுத்த அவர் எழுதவில்லை என்பதை நினைவிற் கொள்ள வேண்டாமோ?

---

# பிறமொழியிற் காணுத

# தமிழ்மொழியின் சொற்சிறப்பு

உலகில் முதன்முதல் மக்கள் பிறந்த நாடு தமிழ்நாடு. அவர்கள் முதன்முதலில் வாய் திறந்து பேசிய மொழி தமிழ் மொழி. அது நமது மொழி.

இவ்வுலகில் தோன்றி மறைந்த மொழிகள் பல. இன்றிருப்பன ஏறக்குறைய இரண்டாயிரமாகும். இவற்றுள் வேறு எந்த மொழிக்கும் இல்லாத சிறப்புகள் பலவற்றை தமிழ் மொழி மட்டுமே பெற்றிருக்கிறது. அவை தொன்மைச் சிறப்பு, தனிமைச் சிறப்பு, இனிமைச் சிறப்பு, இளமைச் சிறப்பு, எளிமைச் சிறப்பு, ஒலிச் சிறப்பு, உருபுச் சிறப்பு, தொடர்புச் சிறப்பு, பண்புச் சிறப்பு, எழுத்துச் சிறப்பு சொற்சிறப்பு, பொருட் சிறப்பு, கவிதைச் சிறப்பு, உவமைச் சிறப்பு, இலக்கியச் சிறப்பு, இலக்கணச் சிறப்பு என பதினுறு ஆகும்.

இவற்றுள் சொற் சிறப்பு என்பது தமிழில் ஒரு தனித்தன்மை வாய்ந்தது. இச் சிறப்பைப் பிற மொழிகளிற் காண இயலாது. அம் மொழிகளின் சொற்கள் பல எழுத்துக்களைக் கொண்டு நீண்டு காணப்படும். தமிழில் உள்ள சொற்களில் 7 எழுத்துக்களைக் கொண்டவை சில. பல ஐந்து எழுத்துக்களையே கொண்டவை. 4,3,2 எழுத்துக்களைக் கொண்ட சொற்கள் மிகை. ஒரு எழுத்துச் சொற்களும் இல்லாமலில்லை. இதனை ஓரெழுத்து ஒரு சொல் எனவும் கூறுவதுண்டு.

அடியில் வருவனவற்றைக் காண்க:

ஆ. பசு. ஈ. ஒரு உயிர்
கோ. மன்னன்.
கை. ஒரு உறுப்பு
தா. கொடு. தீ. நெருப்பு
தை. மாதம் நா. நாக்கு
பை. சாக்கு பூ. மலர்
போ. போகுதல்
வா. வரவேற்றல்
மை. கண்ணின் மை.
வை. வைக்கச் செய்தல்

இவை ஓர் எழுத்துச் சொல் என்பன.

தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கை 247. தனித் தமிழ்ச் சொற்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 86,000. இவை எழுத்தின் பெருக்கத்தையும், சொல்லின் பெருக்கத்தையும், தமிழின் வளத்தையும் ஒருங்கே காட்டுவன.

## முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ.

பிறமொழிச் சொற்கள் உருவத்தை மட்டுமே காட்டக் கூடியவை. தமிழ் மொழிச் சொற்கள் உருவத்தையும், பருவத்தையும் சேர்த்துக் காட்டக் கூடியவை.

''பெண்'' என்பதற்கு ஆங்கிலேயர் 'வுமன்' என்பர். வடமொழியினர் ''ஸ்திரி'' என்பர். இவை இரண்டும் உருவத்தை மட்டுமே காட்டுகின்றன. பருவத்தைக் காட்டுவதாக இல்லை. காட்டவேண்டுமானல் 'யங்' 'ஓல்டு' என்பதையும், 'பால்ய' 'வயோதிப' என்பதையும் சேர்த்துக் கூறியாகவேண்டும். இவை அம்மொழிகளிலுள்ள சொல் வளத்தைக் காட்டுவனவாயில்லை.

டள்ளை – ஆண்குழந்தைப் பருவம்
சிறுவன் – விளையாட்டுப் பருவம்
பையன் – பள்ளிப் பருவம்
காளை – காதற் பருவம்
தலைவன் – குடும்பப் பருவம்
டூதியோன் - தளர்ச்சிப் பருவம்
கிழவன் - இறுதிப் பருவம்

இவை அனைத்திற்கும் 'மென்' எனும் ஆங்கிலச் சொல்லோ, 'புருஷன்' எனும் வடமொழிச் சொல்லோ பொருந்துமா என எண்ணிப் பாருங்கள். இவை அம் மொழிகளின் சொற்பஞ்சத்தையே காட்டுகின்றன.

ஆண். பெண் மட்டுமல்ல, 'பூ' என்பதை எடுத்துக்கொள்ளுங்கள். 'புளவர்' என்பர் ஆங்கிலேயர். 'புஷ்பம்' என்பர் வடமொழியினர். அவ்வளவுதான். உருவத்தையும் பருவத்தையும் காட்ட அவர்களிடம் சொற்களில்லை. தமிழிற் பாருங்கள்:

அரும்பு-பூ அரும்பும் பருவம்
மொட்டு '' - மொக்கு விடும் பருவம்
முகை '' - முகிழ்க்கும் பருவம்
மலர் '' - மலரும் பருவம்
அலர் '' - மலர்ந்தபருவம்
வீ '' - முதுமைப் பருவம்
செம்மல் '' - இறுதிப்பருவம்

எப்படித் தமிழில் உள்ள சொல்வளம்? பூவை விட்டு இலையைத்தான் எடுங்கள். வடமொழியினர் இதை 'பத்திரம்' என்பர். ஆங்கிலேயர் 'லீவ்' என்பர். அச் சொற்கள் 'இலை' என்ற உருவத்தையே காட்டுகின்றன. அதன் பருவத்தைக் காட்டவில்லை. தமிழ்ச் சொற்களோ உருவத்தையும் குறித்து, பருவத்தையும் காட்டி, இன்னும் ஒருபடி தாண்டி அதன் வண்ணத்தையும் கூட நினைவூட்டி மகிழ்விக்கின்றன.

சொற்கள்: உருவம், பருவமும், வண்ணமும்
கொழுந்து: இலை, குழந்தைப் பருவம், சாம்பல் வண்ணம்
தளிர்: இலை இளமைப் பருவம், புளியங்கொட்டை வண்ணம்
இலை: இலை நடுப் பருவம், பச்சை வண்ணம்
பழுப்பு: இலை முதுமைப் பருவம், மஞ்சள் வண்ணம்
சருகு: இலை கிழட்டுப் பருவம், சிவப்பு வண்ணம்

தமிழில் உள்ள இச்சொற்கள் உருவம், பருவம், வண்ணம் ஆகிய மூன்றையும் ஒழுங்கே காட்டுவதைக் கண்டு களியுங்கள்.

அரிசியைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் 'ரைஸ்' [Rice] சோற்றைக் குறிக்கும் சொல்லும் ரைஸ்தான். இது ஆங்கில மொழியின் சொற் பஞ்சத்தைக் காட்டுகிறது. இதனுல் அரிசி கேட்பவர்களுக்குச் சோறும், சோறு கேட்பவர்களுக்கு அரிசியும் கிடைத்து விடலாம். உணவு விடுதிகள் பலவற்றில் 'சோறு' எனக் கூறி வேகாத அரிசியையே படைக்கின்றனர். வயிறெரிக்கு மக்கள் இது என்ன? என்று கேட்டால் 'ரைஸ்' என்கின்றனர். இதையாரால் மறுக்க முடியும்? இத்துன்பங்கள் தமிழ்ச் சொற்களால் வருவதில்லை.

தமிழ் மொழியில் பல பொருள் குறிக்கும் ஒரு சொல் என்றும்; ஒரு பொருள் குறிக்கும் பல சொல் என்றும் உண்டு.

'மா' என்பது ஒரு சொல். அது பல பொருள்களைக் குறிக்கும். அவை அழகு, அளவு, அறிவு, ஆணி, இடித்த மா, இடை, கட்டு, கறுப்பு, ஒரு மரம், குதிரை, சீலை, செல்வம் தாய், நஞ்சுக்கொடி, நிறம், பரி, பெருமை, மேன்மை வண்டு, வயல், வலி, விலங்கு

(8-ம் பக்கம் பார்க்க)

---

## தொழில் நுட்பம்

# எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்க

# ஐதரசன் வாயுவின் உபயோகம்

## ச. தவமாறன்

மனிதனின் அன்ருடகைத்தொழில் நடவடிக்கைகள் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு வருகின்றன. இதற்கான சக்தியின் தேவையும் யும் மிகக்கூடியளவுக்கு அதிகரித்துவிட்டது. சனத்தொகைப் பெருக்கமும் சக்தியின் தேவையை அதிகரிக்கச் செய்கிறது. நாம் இன்று எதிர் நோக்கும் பெரும் பிரச்சனையாக எரிபொருள் தட்டுப்பாடு விளங்குகிறது.

இன்று அதிக பாவனையில் உள்ள எரிபொருள்கள் பெற்ருேலியமும் நிலக்கரியுமாகும். தற்போது உபயோகிக்கும் வேகத்தை நோக்கினுல் இன்னும் சிறிது காலம்தான் இந்த எரிபொருள் நீடிக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆகவே இன்று வெவ்வேறு வகையான சக்திவளங்களைக் கண்டறிந்து உபயோகிப்பதில் விஞ்ஞானிகள் வெற்றிகண்டுள்ளனர்.

நீர் மின்சக்தி, சூரிய சக்தி மூலம் மின்சக்தி, கடல் அலை மூலம் மின்சக்திபோன்ற சூழலை மாசுபடுத்தாத சக்தி மூலங்களும்; உயிரியல் வாயு (மெதேன்), பெற்ருேலிய திரவ வாயு (L. P. G.) போன்ற வாயுக்களும்; மெதனேல், எதனேல், அமோனியா போன்ற திரவ எரிபொருள்களும் நல்ல சக்தி மூலவளங்களாகும்.

இதைத்தவிர ஐதரசன் வாயுவை எரிபொருளாக உபயோகிப்பது தற்காலத்தில் பிரபல்யமாகி வருகிறது.

நல்ல எரிபொருளின் இலட்சணங்கள் என்ன? சிக்கனம், சக்தி நஷ்டமின்மை, சுற்றுப்புற சுகாதாரத்திற்கு கெடுதல் விளைவிக்காமை, அபாயமின்மை, சுலபமான இடப்பெயர்ச்சி, சக்தி சேமிப்பு, எளிதில் கிடைக்கக்கூடிய தன்மை, இப்படிப்பட்ட இலட்சணங்கள் ஐதரசன் வாயுவை எரிபொருளாக உபயோகிக்கும் போது காணமுடிகிறது.

அடுத்து, எவ்வாறு இந்த ஐதரசன் வாயுவைப் பெறலாம் என்பதைநோக்குவோம். உலகிலுள்ள அளவிலா நீரிலிருந்து ஐதரசனைப் பெறமுடியும்.

மின்னினுல் பகுத்தல் முறையினுல் நேரோட்ட மின்சக்தி கொண்டு நீரைப் பகுத்து ஐதரசனை வேருகவும், ஒட்சிசனை வேருகவும் பெறலாம். அல்லது நிலக்கரியையும் நீராவியையும் உயர் வெப்பநிலையில் சேர்த்து நீர்வாயு எனப்படும் கலவையைப்பெற்று, இதிலிருந்து ஐதரசனைப்பிரித்தெடுத்து உபயோகிக்கலாம்.

இவ்வாறு பெறப்பட்ட ஐதரசன் வாயுவை வெகுதூரங்களுக்கு குழாய்மூலம் கடத்திச் செல்லலாம். மேலும் இதை சிலிண்டர்களில் அடைத்து வாயுநிலையில் கொண்டுசெல்லலாம். வெப்பம் வெளிப்படாத சிலிண்டர்களில் திரவமாகவும் அடைக்கலாம். உலோக ஐதரேற்று என்ற திண்மமாகவும் மாற்றி பயன்படுத்தலாம். கார்களில் எரிபொருளாக எடுத்துச் செல்ல உலோக ஐதரேற்று சிறந்தது. இலேசான தன்மையினுல் ஜெட் விமானங்களில் திரவ ஐதரசன் எரிபொருளாகப் பயன்படும்.

ஏனைய எரிபொருள்களை எரிக்கும்போது நச்சுத்தன்மை வாய்ந்த காபன் ஓர் ஒட்சைட்டும் (Co). காபனீரொட்டும் $(Co_2)$. முற்றிலும் எரியாத ஐதரோ காபன் வாயுக்களும் வெளிப்படுவதால் சூழல் மாசடைந்து பிரச்சனை எழுகிறது. காபனீரொட்சைட் அளவுக்கு மீறி உண்டாவதால் இயற்கையிற் காணப்படும் சமநிலை பாதிக்கப்படுகிறது, பூமியின் வெப்பநிலையை அதிகரிக்கவும் செய்கிறது. இந்த ''கிறீன் ஹவுஸ் பாதிப்பினுல்'' பல தீய விளைவுகள் ஏற்படலாம்.

ஆனல் ஐதரசன் வாயுவை எரிபொருளாகப் பாவிப்பதனுல் அது எரிந்து நீரையை தரும். இதனுல் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு அபாயமில்லை. நீரிலிருந்து பெற்ற ஐதரசன் வாயு எரிந்து திரும்பவும் நீரையை தருவதால் நீரின் சமனிலையைப் பாதிக்காது. ஐதரசன் வாயு நிறமற்றது, மணமற்றது, சுவையற்றது, நச்சுத்தன்மையும் அற்றது. ஆகவே ஐதரசன் வாயு சிறந்த எரிபொருளாக அமையும்.

உள்ளெரி என்ஜின்களின் பெற்ருேலைவிட ஒன்றரை மடங்கு சக்தியை ஐதரசன்

-(8ம் பக்கம் பார்க்க)

## சிறுகதை

# மரம் சாய்ந்து போனால்



கு. தர்மலிங்கம்.

சுமதி அடிக்கடி வெளியே வந்து எட்டிப் பார்ப்பதும், உள்ளே போவதுமாக இருந்தாள். அவளுடைய மூத்த மகன் பகீரதன் இரவு ஒன்பது மணியாகியும் இன்னமும் வீடு திரும்பவில்லை. நேரம் போகப் போக அவள் மனம் நிலை கொள்ளாமல் தவித்தது. அவளுக்கு இப்போதய நாட்டு நடப்பு தெரியும்.

அவளோடு சேர்ந்து மற்றப் பிள்ளைகளும் நித்திரைக்குப் போகாமல் இருந்தார்கள். ''நீங்கள் போய்ப் படுங்கோ நாளைக்கு ஸ்கூலுக்குப் போக வேணுமெல்லே'', அவள் சொன்னதைக் கேட்டு அந்தப் பிள்ளைகள் மனம் இல்லாமல் எழுந்து சென்றார்கள். கணவனும் நாளைக்கு சந்தோருக்குப் போகவேண்டியிருப்பதால் அவரை எழுப்பி சாப்பாடு கொடுத்துவிட வேண்டுமென நினைத்துக்கொண்டு கணவனை எழுப்பினாள்.

''சுமதி, தம்பி வந்துவிட்டானா?''

''அவனைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இந்தப் பிள்ளை சொல்வழி கேட்கிறதாகக் காணேலை. சின்ன வயதிலையிருந்து அவனுடைய எண்ணத்துக்குவிட்டு, இப்ப நாங்கள் அந்தப் பயனை அனுபவிக்கிறோம். அடிச்சுத் திருத்துகிற வயதே. தாங்களாகவே எண்ணித் திருந்துகிறதுதானே''

அவளுடைய கணவன் எதுவுமே கூறாமல் மௌனமாக சாப்பிட்டுக் கொண்டிருந்தான் அவளுக்கு தன்னுடைய கணவனின் குணம் தெரியும். எதையுமே வெளிக்காட்டாமல் மனதுக்குள் தேக்கி வைத்து குமைவார். முன்பெல்லாம் கலகலப்பாக பேசி பார்வைக்கு கம்பீரமாகத் தோன்றும் தன்னுடைய கணவன் இப்போதெல்லாம் எதையோ பறிகொடுத்தவர் போல உற்சாகமில்லாமல் உருக்குலைந்து காணப்படுவதற்குக் காரணம் மகனைப் பற்றிய கவலைதான்.

''சுமதி, இவன் சோதனை பாஸ்பண்ணிவிட்டால் எனக்குத் தெரிந்த இடங்கள் எத்தனையோ இருக்கு. அதிலே ஒன்றிலை சேர்த்துப்போடுவன். என்னோடு வேலை செய்கிறவர்கள் மகனைப் பற்றி விசாரிக்கும்போது நான் என்னத்தைச் சொல்லுகிறது'' அவர்வேதனையோடு கூறும்போது அவளும் சேர்ந்து வேதனைப்படுவதைவிட அவளால் வேறு என்ன செய்யமுடியும்.

வானொலியில் இரவுச் சேவை முடிவடைவதற்கான ஒலி கேட்கிறது. சுமதிக்கு பதட்டம் அதிகமாகிறது. ''இந்தப் பிள்ளை இப்படி அணுவணுவாக எங்களை சித்திரவதை செய்வதைக் காட்டிலும் ஒரேயடியாகச் செத்துப் போச்சுதென்றல் அழுதுபோட்டு விடலாம்''. மகனைக் காணவில்லை என்ற ஏக்கம் அவளை இப்படியெல்லாம் நினைக்க வைத்தது.

வெளிநாடு செல்ல இருக்கும் நண்பன் ஒருவன் ஏற்பாடு செய்திருந்த விருந்து ஒன்றில் கலந்துவிட்டு பகீரதன் வீட்டுக்கு வந்தான். அவனைக் கண்டதுதான் தாமதம் அவள் தன்னுடைய ஆத்திரத்தையெல்லாம் கொட்டித் தீர்த்தாள். அவன் அவள் சொன்னதை அலட்சியப்படுத்துவதுபோல எதுவுமே கூறாமல் தன்னுடையபாட்டில் உடுப்புக்களை மாற்றிக் கொண்டு படுக்கைக்குப்போக ஆயத்தமானான். கேசவனுக்கு மகனின் செய்கை ஆத்திரத்தைக் கொடுத்தது. ஆத்திரம் நிதானத்தை இழக்க வைக்கும் அந்த நிலையில் மனச்சாட்சியின் வாய் அடைக்கப்பட்டு விடும். பின் விளைவுகளைப் பற்றி எண்ணிப் பார்க்கும் மனோநிலை இருக்காது என்பதெல்லாம் கேசவன் அறிந்திருந்தான். அதனால் கஷடப்பட்டு பொங்கியெழுந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டான். ஆனாலும் மகனை விசாரிக்காவிட்டால் தந்தை என்ற ஆளுமைக்கு அர்த்தமில்லாமல் போய்விடும் என நினைத்தான் அதனால் படுக்கையைவிட்டு எழுந்து வந்தான்.

பகீரதன் வெளிச்சத்தை அணைக்கப்போகும் சமயத்தில் தகப்பனின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். ''இவ்வளவு நேரமும் எங்கேபோட்டு வாறாய்? கொம்மா கேட்டதற்கு ஒரு பதில் சொன்னயா? நான் இருக்கும்போது இப்படி நடந்து கொள்கிறனீ நான் இல்லாவிட்டால் எப்படியெல்லாம் நடப்பாய்?''

''சங்கர் வெளிநாடு போகிறான். அதுக்காக பார்ட்டி வைச்சவன்''

மகனின் குரல் தடுமாற்றத்திலிருந்து அவன் மௌனம் சாதித்தான். காரணம் புரிந்தது. அவன் குடித்துவிட்டு வந்திருக்கிறான். ''வாய்திறந்தால் பிடிபட்டுவிடுவேன் என்ற பயம் அவனுக்கு. மகனின் செயல் எல்லை மீறிப்போய் விட்டது, என் குடும்பத்தை மானம் கெடுக்க; எங்களுடைய நிம்மதியைக் கெடுக்க இவன் இருக்கிறானே என்று கேசவன் யோசித்தபோது தலை சுற்றுவது போலிருந்தது. ''சுமதி!'' என்று அழைத்தபடி கதவைப் பிடித்துக் கொண்டு கீழே சரிந்தார்.

''என்ன அப்பா உங்களுக்கு'' என்று கேட்டபடி பதறிக்கொண்டு ஓடிவந்தாள் சுமதி. ''அம்மா நான் கார் பிடிச்சுக்கொண்டு வாறன்'' என்று அவளுடைய பதிலுக்கும் காத்திருக்காமல் சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளியே சென்றான். சுமதி கணவனின் தலையைத் தூக்கித் தன் மடி மீது வைத்துக் கொண்டு ''வசந்தி இங்கே ஓடியா'' என்று குரல் கொடுத்தாள். வசந்தியும் அரை குறைத் தூக்கத்தில் கண்களை கசக்கிக்கொண்டு ஓடி வந்தாள். அவள் தாயும், தகப்பனும் இருந்த நிலையைப் பார்த்து ''அப்பா'' என்று உரத்துக் கத்தினாள். அவள் போட்ட சத்தத்தைக் கேட்டு அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் ஓடிவந்தார்கள்.

முன்பு இரவு எந்த நேரமாவது அழைத்தால் கார் விடுவதற்கு சம்மதிப்பவர்கள்; இப்போது பொழுதுபட்டாலே போதும் அசைந்து கொடுக்க மாட்டார்கள்.

பகீரதன் எவ்வளவோ கெஞ்சி மன்றாடி கார்க்காரனை சம்மதிக்க வைத்து கார் ஒன்றைப் பிடித்துவந்தான். அவன் கார் கொண்டுவந்த போது கேசவன் கண் விழித்திருந்தார். பக்கத்து வீட்டு மாதவன் அவருக்கு காப்பி பருக்கிக்கொண்டிருந்தார்.

கேசவன் தன்னைச் சுற்றி நிற்பவர்களை ஒருமுறை நோட்டமிட்டார், அவருடைய மனம் சற்று முன்பு நடந்து முடிந்த நிகழ்ச்சிகளை கவ்விப்பிடிக்க முயற்சித்தது. ''எனக்கு ஒன்றுமில்லை'' என்று அவர் மறுத்தபோதும் பகீரதன் வற்புறுத்தி அவரை கிட்டவுள்ள டாக்டரிடம் கூட்டிச் சென்றான். அவனுடன் மாதவனும் சென்றார்.

கேசவன் எவருடைய துணையுமில்லாமல் தானாகவே இறங்கி நடந்தார். தனக்குத் திடீரென தலைச்சுற்று வந்தது என அவர் டாக்டரிடம் கூறினார். அவரை கவனமாகப் பரிசோதித்த டாக்டர் ''கடுமையாக யோசித்துவிட்டீர்கள்போலையிருக்கு. உடம்பு மிகவும் பலவினமாயிருக்கு'' என்று கூறிவிட்டு சில மாத்திரைகளைக் கொடுத்து ஆலோசனை வழங்கி அனுப்பிவைத்தார். பகீரதனின் மூளை கடுமையாக வேலை செய்தது.

''அப்பாவின் கவலைக்குக் காரணம் நானாகத்தான் இருக்கும். அப்பாவுக்கு ஒன்று நடந்துவிட்டால் அதை என்னால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும். கொஞ்ச நேரம் அம்மாவும், தங்கைகளும் பட்டபாடு. அம்மா துணையிழந்து என் தங்கைகள் அனாதைகளானால்......'' அவனால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

தான் பொறுப்பில்லாமல் வளர்ந்துவிட்டதற்கு சிறுவயதில் செல்லம் கொடுத்து கண்டிக்காமல் வளர்த்த தன்னுடைய பெற்றோர்களும் ஒரு வகையில் உடந்தை என்பதில் அவனுடைய மனம் சமாதானத்தைத் தேட முயற்சித்தது. எது எப்படியிருந்த போதிலும் இனிமேல் அப்பாவினுடைய கவலைக்கு தான் காரணமாக இருக்கமாட்டேன்? என்று உறுதி கொண்டபோது அவனுடைய மனம் இலேசாகியது.

(யாவும் கற்பனை)

---

## மலரும் நினைவுகள்

# சூரிய ஒளிமூலம் புகைப்படங்கள்!

''50 வருடங்களுக்கு முன்னர் வடக்கில் மின்சாரம் கிடையாது. சூரிய வெளிச்சத்தின் உதவியுடன்தான் புகைப்படங்கள் எடுக்கப்பட்டது. சூரிய ஒளியைக் கண்ணாடி மூலம வெள்ளைச் சீலையினால், ஒருங்குபடுத்தி அதன் மூலம் படங்கள் எடுக்கப்பட்டது. அக்காலத்தில் இதனை 'சன்லைட் போட்டோ' என்றுதான் அழைப்பார்கள். படங்கள் நன்றாக இருக்கும்.''

படபபிடிப்புக் கலையில் 40 வருடங்களுக்கு மேலாக அனுபவம் பெற்றுள்ள திரு. குகன், அக்கால ஆரம்பப் படப்பிடிப்புப் பற்றி இவ்வாறு தெரிவித்தார். இவருக்கு வயது 55. பருத்தித்துறையைச் சேர்ந்தவர். அங்கு அண்ணனின் ஸ்ருடியோவில் படிக்கும்போதே இக்கலையைப் பயின்றவர், இதில் விருப்பம் கொண்டு படிப்பு முடிந்ததும் இதனையே தன் தொழிலாகக் கொண்டு சாவகச்சேரியிலும், அதே பெயரில் ஒரு ஸ்ருடியோவை ஆரம்பித்தார். அண்மையில் இவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

'பருத்தித்துறையில் எப்பாது ஸ்ருடியோ ஆரம்பிக்கப்பட்டது?' என்று கேட்டேன்.

''ஆண்டு ஞாபகமில்லை. 2-வது உலகயுத்தத்திற்கு முன்னர். 1939 பகுதியில்''

''பின் சாவகச்சேரியில்?''

''அது 1952ல்''

''இந்தத் தொழிலில் விருப்பம் ஏற்படக் காரணம்?''

''ஆரம்பத்தில் பருத்தித்துறையில் உள்ள அண்ணனின் ஸ்ருடியோவில் தினமும் அவதானித்து வேலைகளை அறிந்து கொண்டதும், அதில் விருப்பம் ஏற்பட்டது. அங்குதான் பழகினேன். படிப்பு முடிந்ததும், அதன் கிளையாக சாவகச்சேரியில் அதே பெயரில் ஆரம்பித்தேன்?'

''சாவகச்சேரியில் எடுத்த முதல் படம்?''

''பட்டினசபைத் தலைவரையும் பாரியாரையும் அவர்தான் ஸ்ருடியோவைத் திறந்துவைத்தார்''

''யாழ்ப்பாணத்தில் முதன் முதல் யார் ஸ்ருடியோவை ஆரம்பித்தது?''

''திரு. மாணிக்கத்தம்பி என்பவர் முதலில் யாழ். நகரில் ஸ்ருடியோ ஆரம்பித்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். 2–ம் யுத்தகாலப் பகுதியில் பிறின்ஸ் ஸ்ருடியோ நிறுவப்பட்டது. அதன்பின் படிப்படியாகப் பல''.

''அப்போது வெளிப் படப்பிடிப்புக்கு என்ன கமறா பாவித்தார்கள்?''

''சிறிய சதுரப்பெட்டி கமறா. 620, 120 என்று படச்சுருள்கள் இருக்கும். எட்டுப் படங்கள் எடுக்கலாம். படச்சுருள் கழுவ 50 சதம். ஒவ்வொரு படமும் பிறின்ற் பண்ண 25 சதம்.

'அக்காலத்தில் படப்பிடிப்புகள் எப்படி?'

'அப்போது பாஸ்போட், அடையாள அட்டை படங்கள் கிடையாது. குடும்பப் படங்கள், பிரியாவிடைப் படங்கள் எடுப்போம்'.

'பாஸ்போட்கிடையாதா?''

''பாஸ்போட் தேவையில்லை. 1945-ம் ஆண்டு காங்கேசன்துறை ரயில் நிலயத்திலிருந்து 9 ரூபா 50 சதத்திற்கு டிக்கட் எடுத்து நேராக மதுரையில் போய் இறங்கலாம். வழியில் கப்பலுக்கு 2–ம் வகுப்புக்கு இரண்டரை ரூபா. தொற்று நோய் தடுப்பூசிப் பத்திரங்கள் மட்டும் தேவை.'

'வேறு என்ன படங்கள்?'

'பாடசாலை பிரியாவிடை படங்கள்தான் அதிகம். கோவிலில்அதிகாலை சுவாமிவீதிவலம் வருகையில் சப்பறத்துடன் பெரிய மேளம், சின்னமேளங்களை வைத்துப் படம் எடுப்பதில் அக்காலத்தில் அதிக விருப்பப்படுவார்கள்.'

'பிறந்த நாள் படங்கள்?'

'அக்காலத்தில் எவரும் இப்போதுபோல பிறந்தநாள் கொண்டாடுவதில்லை. கலியாண வீட்டுப் படங்கள் எடுப்போம்.'

'அப்போது கலர்ப்படங்கள் இல்லையா?

''கறுப்பு வெள்ளைப் படங்கள் மட்டும் தான். கலர்ப் படங்கள் இப்போதான் வந்தது. அப்போது 'ஓயில் பெயின்டி'னல் படங்களுக்கு கலர் கொடுப்போம். வாட்டர் கலர் புத்தகம் இருந்தது. அதனாலும் கலர் கொடுப்போம்.'

'வெளியிடங்களுக்குப் போவதுண்டா?'

'மன்னார், வவனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி பாடசாலைகளுக்குச் சென்று படங்கள் எடுப்போம்.'

''இப்போது கறுப்பு வெள்ளை படங்கள் எடுப்பதில்லையா?''

'பாஸ்போட், அடையாள அட்டைப் படங்கள் கறுப்பு வெள்ளைதான். அத்துடன் கலியாண வீட்டுப் படங்கள், குரூப்போட்டோக்களும்கறுப்பு வெள்ளைதான். இப்போ மில்லிமீற்றர் கலர் கமறாக்கள் பல வந்துள்ளன. பழைய படச்சுருள்கள் கிடையாது.'

'போஸ்காட் படம் எடுக்க அப்போது எவ்வளவு செலவு?'

'அப்போது போஸ்காட் படம் எடுக்க ஏழரை ரூபா. இப்போது 45 ரூபா. அப்போது பாஸ்போட் படம் எடுக்க இரண்டரை ரூபா. இப்போது 30 ரூபா. 12X10 படம் எடுக்க அப்போது 50 ரூபா. இப்போது எட்டு மடங்கு. எல்லாம் அதிகமாகி விட்டது. ஆனாலும் படங்கள் எடுப்பது குறையவில்லை.

'வீடியோ வந்தபின் படங்கள் எடுப்பது குறைந்துள்ளதா?'

'இல்லை. கலியாண வீட்டில் வீடியோவுடன் கலர்ப் படங்களும் பிறம்பாக எடுக்கின்றார்

[8ம் பக்கம் பார்க்க]

—கா. யோகநாதன்

# தொடர் நவீனம்



# யாககுண்டம்

-செங்கை ஆழியான்

## ★ நடந்த கதை

### அத்தியாயம் - 1

மார்கழி மாதத்துப் பனி புகார் நீங்காத அதிகாலை வேளையில், பனங்கூடலில் விழுந்துகிடந்த கங்குமட்டைகளைக் கிளாக்கர் சரவணமுத்தர் பொறுக்கிக்கொண்டிருக்கிறார். பென்சனியர். இராசம்மா அவரது மனைவி. எட்டுப் பிள்ளைகள். கங்கு மட்டைகளைப் பொறுக்கிக் குவித்துவிட்டு நிமிர்ந்தபோது. பனைக்குப் பின்னால் குந்திவிட்டு, இரத்தினம் எழுந்து வருவது தெரிகிறது,

உப்பிய வயறு. நாற்பத்தாறு வயதிருக்கும்.

''இந்த வயதிலை வீட்டில் இருந்தால் என்ன?''- இரத்தினம்.

அவர் மௌனம் அவனுக்கு எரிச்சலைத் தருகிறது. மனதிற்குள் நினைக்கிறான. 'ருங்கி பிடிச்ச மனிசன். வெளிநாட்டில் ஐஞ்சு பேர். மூன்று பொடியள் உழைக்கிறான்கள்... இரண்டு பெட்டையள் புரியன் மாருடன் வெளிநாட்டில். மாதா மாதம் ஆயிரக்கணக்கில் வருகுது, கிழவனுக்குக் கெப்பர்.'

சரவணமுத்தர் நினைக்கிறார். 'இரத்தினத்தின் ஒரு பெடியன் வெளிநாட்டில் உழைத்தே பெரிய வீடு மாளிகை மாதிரி கட்டிவிட்டான். எனக்கு ஐஞ்சு பிள்ளையள் வெளிநாட்டில. இவனிடம் நம்பிக்கைக்கு வித்த கொத்தியடி வயலை மீண்டும் பெற வழியில்லை!'

கொத்தியடி வயல் அவர் பரம்பரைச் சொத்து. மூத்த மகனைச் சவுதிக்கு அனுப்புவதற்காக விற்க நேர்ந்துவிட்டது.

அவ்வயலின் ஓரமாக வீதியருகில் மண்நிரப்பி வீடு கட்டப்போவதாக இரத்தினம் கூறுகிறான். சரவணமுத்தர் திகைத்துப் போய் விடுகிறார். நெஞ்சில் வலி.

அவர் பரம்பரைக்கு உணவளித்த வயலை மண்ணடித்து, இரத்தினம் குடியிருப்புக் காணியாக்கப் போகிறான். அதில் கல் வீடொன்று தோன்றிவிடும். பச்சைப் பசேலென்ற பயிர்கள் முளைவிட்டுச் சிலிர்த்த முகம். கல் கட்டிடத்தால் மூடப்பட்டுச் சமாதியாகிவிடும்.

வாயில் ஒரு. துண்டு புகையிலையை அதக்கிக்கொண்டு ஏமாற்றத்துடன் கங்கு மட்டைச்சுமையுடன் வீட்டிற்கு வருகிறார். வீட்டு வாசலில் அவரது மனைவி இராசம்மா தபால்காரனைப் பார்த்துக்கொண்டு நிற்கிறாள்.

### அத்தியாயம் - 2

சரவணமுத்தரின் தகப்பனார் கந்தப்பு திறமையான விவசாயி. கலப்பையை எடுத்து வண்டிலில் வைத்து, உழவு மாடுகளை வண்டிலில் பூட்டிக்கொண்டு புறப்படும்போது, ''நானும் அப்பு வாறன்'' என்பார் சரவணமுத்தர்.

''உனக்கு இந்த வேலையெல்லாம் ஏன்? நீ நல்லாப் படிக்கவேணும். கவுண்மேந்தில உத்தியோகம் பார்க்கவேணும்... எழுந்திருந்து படி'' என்பார்.

''அப்பு நான் உங்கமாதிரி கொண்டை கட்ட மாட்டன்'' என்பார் அவர்.

''சிங்கத்துக்குப் பிடரி மயிர் மாதிரி ஆம்பிளையளுக்குக் குடுமிதான்ரா இலட்சணம். நீ கவுண்மேந்தில உத்தியோகம் பார்க்கப் போகிறவன். கவனமாகப் படி''. தகப்பன் கந்தப்பரின் பேச்சு கடைசியில் எப்போதும் அவன் படிப்பில்தான் வந்து நிற்கும்,

கந்தப்பர் அற்புதமான மனிதர், சனிக்கிழமைகளில் ஒழுங்காக முழுகுவார். உச்சந் தலையிலிருந்து பாதம்வரை சளிக்கச் சளிக்க எண்ணெய் வார்த்துத் தேய்த்து முழுகுவார். பங்கு இறைச்சி பனங்கள்ளுடன் சனிக்கிழமை அற்புதமாகக் கழியும்.

அப்புவின் முழுக்கு முடிய அரைக்கிணறு வற்றிவிடும்.

அவன் சீனியர் பாஸ் பண்ணிய செய்தி ஊரெல்லாம் பரவியபோது, அப்பு அடைந்த ஆனந்தம் சொல்ல முடியாது, கச்சேரியில் கிளாக்கர் வேலை கிடைக்கிறது. பலவிடங்களிலிருந்தும் சரவணமுத்தருக்குப் பெண் கேட்டு வருகிறார்கள். கச்சேரியில் வேலை வாங்கிக் கொடுத்த தலைமைக்காரர் சங்கரப்பிள்ளை, தனது தாலி கட்டாத இரண்டாவது மனைவிக்குப் பிறந்த பெண்ணுக்கு மாப்பிள்ளை கேட்கிறார்.

''வேணுமென்றால் உங்கட மூத்த சம்சாரத்தின்ர பெட்டையைச் செய்வம்'' என்கிறார் கந்தப்பர்.

''அது சரிவராது. அவளுக்கு நான் சிறுப்பரின்ற மோனைச் செய்யவிருக்கிறன்'' எனகிறார் சங்கரப்பிள்ளை.

வீட்டிற்கு மாப்பிள்ளை தேடி வந்தவர்களுக்கு ஆச்சி திடமாகப் பதில் சொல்லி அனுப்புகிறாள். ''என்ர அண்ணற்ற பொடிச்சி இராசம்மா அவனுக்காகப் புங்குடுதீவில் பிறந்திருக்கிறாள். சின்ன வயதிலேயே முற்றாகிப்போன விசயம்.''

பாய் வள்ளத்தில் ஏறி புங்குடுதீவிற்குச் செல்கிறார்கள். சரவணமுத்தர், ''ஆச்சி பொம்புளை வடிவாக இருக்கவேணும். வடிவாக இருந்தால் தான் கலியாணம் செய்வன்'' என்கிறார். இராசம்மாவைப் பார்த்ததும் அவருக்கு ஒரு பயம் பற்றிக்கொள்கிறது. செந்தாமரை மாதிரி இருக்கிறாள், கறுவல் என்னை அவளுக்குப் பிடிக்குமோ?'

### அத்தியாயம் - 3

மூக்குப் பேணியில் ஆவி பிறக்க இராசம்மா தந்த பால்தேநீரை அருந்தியபின்னர் களைப்புச் சற்று நீங்கியது போல சரவணமுத்தர் உணர்ந்தார்.

''என்ன ஒரு மாதிரி இருக்கிறியள்?'' இராசம்மா.

''ஊரிலெல்லாம் நாங்க ஏதோ இராச வாழ்வு வாழ்கிறம். இங்க கப்பல் ஓடுது என்று எண்ணம்- எங்கட துயரம் எங்களுக்குத் தெரியும், நாய்க்கு எங்கு போனாலும் நக்குத் தண்ணிதான். ஐஞ்சு பிள்ளையள் வெளிநாட்டில் இருந்தும் முதுச வயலை மீட்க முடியவில்லை, சோறு போட்ட வயலை மண்ணடித்து வீடாக்கப்போகிறானும்-''

''ஏன் பிள்ளையளைக் கரித்துக்கொட்டிறியள்?''

''பெற்றுவளர்த்து ஆளாக்கி உலகத்தின் திசைக்கொன்றாக அனுப்பிவிட்டு, இங்கு நாங்க தவித்துப்போய் தனிமரமாக நிற்கிறம். எத்தனை லருடங்கள் பிள்ளைகளைப் பார்த்துப் பேசி. அதுகளின்ற சுகதுக்கங்களில கலந்துகொள்ள வழியின்றி கிழடுகள் தங்கிவிட்டம். எவ்வளவு பேரப்பிள்ளைகள் இருந்தும் பாவம் செய்த பிறவி நான் ஒன்றைக்கூட ஆசை தீர அள்ளி அணைத்துக் கொஞ்சி மகிழ முடியாமல்... மடியில் போட்டு ஒரு பேரனைச் சீராட்ட முடியவில்லை. அதுகளின்ர மழலைகளைக் கேட்கமுடியவில்லை. கொத்தியடி வயல் எனக்குத் தேவையில்லை. என் கைகளில், மார்பில் உதைக்க எனக்கு என் பேரப் பிள்ளைகள்தான் வேணும்'' என்றாள்.

மகள் மல்லிகா தகப்பனிடம் கொம்பியூட்டர் கல்விக்குக் கட்டப் பணம் கேட்கிறாள். அவளையும் வெளிநாட்டிக்கு அழைக்கத் தமையன்மார் திட்டமிடுகின்றனர்.

''எல்லாத்தையும் அனுப்பிவிட்டு நாங்க, எங்களைக் கடைசி காலத்தில் பார்க்கிறதுக்கு செத்தால் எடுத்துப் போட்டுக் கொள்ளி வைக்கிறதுக்கு...''

''எங்கட சுயநலத்திற்காக அதுகளை நாங்க தடுக்கமுடியாது.''

''அது சுயநலமில்லேங்க. அதுகளின்ர கடமை.'' இது இராசம்மா.

''பொன்னரப்பா செத்தபோது அவரின்ர பிள்ளையள வெளிநாட்டில. அவரின் சடலம் எரியவில்லையா?''

பொன்னரப்பாவின் மகள் எழுதியிருந்தான். ''ஐயாவின் செத்தவீட்டை வீடியோ பிடிச்சு அனுப்பிவைக்கவும். அதையாவது நாங்க பார்த்து மகிழ்கிறோம்''.

### அத்தியாயம்- 4

வடக்குத் தெற்காகப் போடப்பட்டிருந்த வாங்கில், தென்புலம் நோக்கிப் பொன்னரப்பாவை வளர்த்தியிருந்தார்கள். வெண்தாடி நிறைந்த முகத்தில் மரண பயத்திற்குப் பதிலாக மாறாத ஏக்கத்தில் துயர் கவ்வியிருந்தது.

''பொடியங்களின்ர வீடு. பக்குவமாகப் பாதுகாத்துக் கொடுத்துவிட்டால் என் கடமை தீர்ந்தது. எனக்கென்ன குறை. மூன்று பிள்ளையளும் வெளிநாட்டில. கெதியில வந்திடுவான்கள்.''

பிள்ளையள் வரல்லை.

பொன்னரப்பாவின் மூத்த மகன் சிவபாலன், சரவணமுத்தரின் மகள் ஈஸ்வரியை விரும்பிமணந்துகொண்டவன். அவ்வகையில் சரவணமுத்தரும், பொன்னரப்பாவும் சம்பந்திகள்.

''சின்ன உத்தியோகம் எண்டாலும் இங்கினேக்க பார்த்தால் நல்லது'' என்று இராசம்மா எவ்வளவு சொல்லியும் அவர்களின் விவாகம் நடந்தேறியது.

''எவ்வளவு பக்குவமாக வளர்த்தன். கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக்கொண்டு பருந்துகளிடமிருந்து காப்பது போலப் பாதுகாத்தன். எங்களை மிஞ்சி தன் எண்ணப்படி மாப்பிள்ளை பிடிச்சிட்டாளே? புங்குடுதீவில என் அண்ணற்ற மோன் கனகுவுக்குச் செய்து வைக்கவேணும் என்று நான் கனவு கண்டன். அவள் தன் எண்ணப்படி நடந்திட்டானே?'' - இது இராசம்மாவின் ஆதங்கம்.

கனடாவிற்குப் பெண்ணை அனுப்புகிறார்கள்.

''மணவறையில் இருத்தி இரத்தம் பண்ணிக்கொடுக்கிற பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை.''- பொன்னரப்பா.

இரண்டாவது மகனுக்காவது ஊரில் வைத்துப் பெரிதாக உற்றார் உறவினர்சூழ திருமணம் செய்துபார்க்க அவர் ஆதனப்பட்டார். பெண் பார்த்து முற்றாக்கி மகனுக்கு எழுதினார்.

''இப்ப நாடு இருக்கிற இருப்பில நான் வர முடியாது. வந்தால் மீண்டும் இங்க வரமுடியாது. ஆதலால் பெண்ணை அழைத்துக் கொண்டு இந்தியாவுக்கு வரவும். நானும் அங்கு வருகிறன். அங்கு தாலி கட்டலாம்...'' என்று மகனிடமிருந்து பதில் வந்தது. பொன்னரப்பா இடிந்துபோனார். பெண்ணை அழைத்துக் கொண்டு இந்தியாவிற்குச் செல்கின்ற வேளையில் அவருக்கு சுகயீனம் வந்துவிட்டது. பெண் வீட்டார் மட்டும் இந்தியாவிற்குச் சென்று பெண்ணை மாப்பிள்ளையிடம் ஒப்படைத்துவிட்டு வந்தனர்.

ஏமாற்றத்தின் பின்னர் பொன்னரப்பா மிகவும் சோர்ந்துவிட்டார். ''என்ன வாழ்வடா சரவணை. அனாதைபோல இங்கு இருந்துகொண்டு, இந்த வயதில ஓரிடத்திலிருந்து வாங்கிச் சாப்பிடக் கொடுத்து வைக்கவில்லை. மருமக்களின்ர கையால வாங்கிச் சாப்பிட முடியவில்லை. கடை கண்ணிகளிலும், சிலவேளை நானே சமைச்சும் சாப்பிட என்ன விதி? சீச்சி என்று போச்சுது. வயோதிப மடத்தில சேர்ந்தால் பிள்ளைகளுக்குக் கௌரவமில்லை.''

''யாழ்ப்பாணத்தில எல்லா வீடுகளிலும் இதுதான் நிலைமை. கிழவர்களும் குமருகளும்தான் வீடுகளில இருக்குதுகள். இருக்கிற குமருகளும் இப்ப வெளிநாட்டிற்கு ஏற்றுமதியாகுதுகள். கடைசியில் இங்க எஞ்சப்போவது நாங்கதான். வீட்டிற்கு வீடு அனாதைகளாகச் சாகப் போறம், கொள்ளிவைக்கவும் ஆளில்லாமல்...''

பொன்னரப்பாவிற்குச் சரவணமுத்தரே கொள்ளிவைக்கிறார்.

### அத்தியாயம்- 5

வானொலி பாடுகிறது. அதனைக் கேட்டுக்கொண்டு சரவணமுத்தரின் கடைசி மகள் சுசிலா படிக்கிறாள். மல்லிகா அடுக்களைக்குள்ளிருந்து கோப்பியுடன் வந்து தாயிடம் கொடுக்கிறாள்.

''அம்மா, சந்திரன் அண்ணன்ர கடிதம் ரெண்டு மாதமா வரவில்லை.''

''அவனுக்கு வேலை அதிகம். லண்டனில அவன்தான் புற்றுநோய் ஸ்பெசலிஸ்டாம். ஒய்வு ஒழிச்சலில்லை.'

''அண்ணியாவாது எழுதிப் போட்டிருக்கலாம்...'' என்கிறாள் சுசிலா.

சந்திரனுக்காக அவர்கள் எவ்வளவோ செய்தார்கள். கிடுகால் வேய்ந்த மண் வீடு கல்வீடானது சந்திரனுக்காகத் தான். எலி பிடிக்கக் கூரையில் நெளிந்த சாரை, தொட்டிலில் விழுந்ததால் இராசம்மா பிடிவாதமாக வீடு கட்டக் கணவனை வற்புறுத்தினாள்.

சந்திரன் மருத்துவத் துறைக்கு எடுபட்டான். தன் துயரங்கள் எல்லாம் தீர்ந்தது என அவர் மகிழ்ந்தார். செலவுகள் அதிகரித்தன. சந்திரன் வீட்டுக் கஷ்டங்களை உணராமல் செலவு செய்தான். படிப்புச்செலவிற்காகவும்வேறு செலவுகளுக்காகவும். ஸ்கூட்டர்வாங்கவும் வீடு விற்கப்பட்டது.

''கஷ்டப்படாமல் படிக்கட்டும். முடிந்தால் ஒரு வரியத்தில செலவழிச்சதைத் தேடிவிடலாம்...''

அவர்களின் ஆசையில் மண் விழுந்தது. டொக்கரான கையுடன் தனக்குப் பிடித்த ஒருத்தியைப் பெற்றோர் சம்மதமின்றி அவன் கலியாணம் யாணம் செய்துகொள்கிறான். சந்திரனின் ஒரு மாதச் சம்பளத்தைக் கூட அவர் கை நீட்டி வாங்கவில்லை.

இலங்கையில உழைக்கமுடியாது என்று லண்டனுக்குப் போய்விடுகிறான்.

## ரயிலில் எச்சரிக்கை

பணி

மோட்டார் வாகனங்களை நீண்ட தூரம் ஓட்டிச்செல்லும்போது தூக்கம் வராமல் தடுப்பதற்காக இடையில் சற்று நேரம் வண்டியை நிறுத்தி சாரதிகள் இளைப்பாறிச் செல்வதுண்டு. ஆனால் ரயில் வண்டி சாரதி அவ்வாறு நினைத்த இடத்தில் வண்டியை நிறுத்தி இளைப்பாற முடியாது. தூக்கத்தினால் அவரது கவனம் சிதறுமானால் நூற்றுக்கணக்கானோர் உயிரிழக்க நேரிடும்.

எனவே ரயில் வண்டி சாரதிகள் தூங்காமல் தடுக்க, விசேட சாதனம் ஒன்றை மாஸ்கோவில் உள்ள ரயில்வே என்ஜினியர்கள் இன்ஸ்டியூட் உருவாக்கியுள்ளது. என்ஜின் டிரைவரின் விரல்களில் பொருத்தப்படும் ஒருவகை உலோக வளையங்கள் மனிதனின் நிலையில் மாற்றங்களை உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன. டிரைவருக்குத் தூக்கம் வரும்போல இருக்குமானால் அவரது உடல்அதிர்வுகளின் மூலம் அவரது நிலையை உணரும் உலோக வளையங்கள் எச்சரிக்கை மணியை ஓங்கி ஒலிக்கச்செய்கின்றன. அந்த எச்சரிக்கை மணி ஒலியால் சாரதி விழித்துக்கொள்வார். மணி ஒலியை நிறுத்துவதற்கு ஒரு விசையை அழுத்தவேண்டும். ஒருவர் தூக்க நிலையிலேயே அந்த விசையை அழுத்தி ஒலியை நிறுத்துவாராகில், அவரது உடல் அதிர்வுகளைப் புரிந்துகொண்டு அடுத்த ஐந்து விநாடிகளில் மறுபடியும் எச்சரிக்கை மணி ஒலிக்கும். எட்டு விநாடிகளுக்குள் டிரைவர் விழிக்கவில்லை என்றால் தானியங்கி பிரேக் போட்டு வண்டி நின்றுவிடுகிறது.

# இவ்வார பலன்

04 - 03 - 1990 முதல் 10 - 03 - 1990 வரை

கிரகநிலை- சூரியன் கும்பம். சந்திரன் இடபம், மிதுனம், கடகம். செவ்வாய்- மகரம், புதன், கும்பம், வியாழன், மிதுனம். வெள்ளி- மகரம்- சனி- தனுசு.- இராகு மகரம், கேது, கடகம்.

**மேடம்:** குடும்பத்தில் பற்றற்ற நிலை இருக்கும். தொழிலால் போதிய லாபமிராது. நீண்டநாள் பிரச்னை மீண்டும் சிக்கலைத் தரும். உறவினர்களால் செலவுமுண்டு, பெரியோர் ஆசியுண்டு, நன்மை கலந்த வாரமாகும்.

**இடபம்;** எதிர்பாராத சந்திப்புக்கள் நிகழும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பொருளாதாரத்துறையில் மேம்பாடு காணும். தொழில் அபிவிருத்தியும் முதலீடுகளும் இருக்கும், மகிழ்ச்சியான வாரம்.

**மிதுனம்:** பிரச்சனைகள் வார இறுதியிலே சாதகமான பலனைத் தரும். குடும்பத்தில் விரிசலுண்டு. பொருளாதார மந்தம், அந்நியர் தலையீடு இருக்கும், எதிர்பார்க்கும் காரியங்கள் தாமதமாகும், மனநிம்மதி குன்றிய வாரம்.

**கடகம்:** வார முற்பகுதியில் தொழில் லாபமுண்டு. பணவகை உற்சாகம் இருக்கும். தொழிலாளர் பிணக்குகள் குறையும், மனைவியின் தேகாராக்கியம் குன்றும். பயணங்களால காரிய அனுகூலம், நன்மையான பலன்கள் கிட்டும் வாரம்.

**சிங்கம்:** குடும்பத்தில் மங்களகரமான காரியங்கள் நடக்கும். தொழில் மாற்றங்களும் புதிய முதலீடுகளும் இருக்கும். எதிர்பாராத உதவி கிடைக்கும், பழைய குரோதங்கள் அகலும். பொதுச் சேவையில் நன்மதிப்புண்டு, சிறப்பான வாரம்.

**கன்னி:** வார முற்பகுதியில் நிலவும் அமைதியின்மை குறையும். வீட்டில் விருந்துபசாரமுண்டு. குடும்பத்தில் பிரிவு அகலும், மக்களால் பாராட்டு கிட்டும். தொழில் முயற்சிகள் கைகூடும். அதிகாரிகள் பாராட்டு கிட்டும். தீமைகள் குறைந்த வாரம்.

**துலாம்:** மனதிலே குழப்ப நிலை தோன்றும், சொத்து சம்பந்தமான பிரச்னை உருவாகும். குடும்பத்தில் மனஸ்தாபம் தலைதூக்கும், தொழிவில் எதிர்பார்த்த லாபம் கிட்டாது. பணக் கஷ்டம் உண்டு. அதிகாரிகளின் தொல்லைகளுக்குள்ளாகலாம். மனச்சுமையுள்ள வாரம்.

**விருச்சிகம்:** வார ஆரம்பத்தில் நிலவும் மகிழ்ச்சி பிற்பகுதியில் குன்றும். குடும்பத்தில் புதிய பிரச்சனை தலைதூக்கும். மாமன் வகை உதவிகளும் ஒத்துழைப்பும் கிட்டும். தொழிலில் போட்டி அதிகமாகும். நன்மைகள் குறைந்த வாரம்.

**தனுசு:** முற்பகுதியில் நினைத்த காரியங்கள்கைகூடும். தாயார் நலம் அபிவிருத்தியடையும். பொருளாதார வசதிகள் பெருகும். குடும்பத்தில் நிலவிய கருத்து முரண்பாடு அகலும். புத்திரர் சம்பந்தமான கவலையுண்டு. வார பிற்பகுதியில் பலன் குறைந்த வாரம்.

**மகரம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டு. தொழிலில் விருத்தியும் தொழிலாளர் ஒற்றுமையுமுண்டு. எதிர்பார்த்த பண உதவி கிட்டும். வீட்டில் சுபகாரியங்கள் நிகழும். பயணங்கள் நல பலா பலனைத் தரும். மகிழ்ச்சியும் அமைதியும் நிறைந்த வாரம்.

**கும்பம்:** குடும்பத்தில் கவலைகள் அதிகமாகும். தொழிலில் லாபமிருக்காது. பொருளாதாரம் பாதிக்கும். பணக் கஷ்டமுண்டு. சகோதரர் ஒருவரது பிரச்சனை மோசமாகும். அனுவசிய செலவுகளும் அலைச்சலுமுண்டு. அமைதி குன்றய வாரம்.

**மீனம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டு. வெளியூர் பயணங்கள் இனிது நிறைவேறும். தாயார் உதவியுண்டு. தொழிலில் புதிய மாற்றங்களும் பண லாபமும் உண்டு. இடமாற்றமுண்டு. பொதுச்சேவையில் பாராட்டு கிடைக்கும். அறிஞர் சந்திப்புண்டு. மகிழ்ச்சியான வாரம்.




பஸ்கண்டக்டர்:- ஆச்சி எவ்விடம்?

வயோதிபப்பெண்:- பிறந்த இடம் புங்குடுதீவு, புகுந்த இடம் புளமுலைக்கட்டுவன.

ஃ ஃ ஃ

ஒருவர்:- என்ன இராத்திரி உங்களுக்குள் சண்டையா? மண்ணுலேபோங்க கட்டையிலே போங்க என்றுசத்தம் கேட்டதே?

மற்றவர்:- அப்படி ஒன்றுமில்லை மணல் பக்கமாகவும் மிதியடிக்கட்டையிலும் போகுமாறு என் மனைவி அன்பாகச் சொன்னுள்.

— வி. பிரான்சிஸ்

## எரிபொருள்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்கிறது என ஆராய்ச்சியாளர்கள் நிரூபித்துள்ளனர்.

சுப்பர் சோனிக் விமானங்களில் அதிக வெப்பநிலை உணடாகா வண்ணம் ஐதரசன் செயல்புரிகிறது. ஐதரசனின் எரிதல் வெப்பநிலை 58,5 பாகையாக இருப்பது. அதற்கு டீசல் இன்சின்களில் எரிபொருளாக உபயோகிப்பதற்கு தடையாக உள்ளது.

இந்த ஐதரசன் எரிபொருள் கலங்கள் பெரிய அளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. தேவையில்லாத சமயத்தில் ஐதரசன் வாயுவைச் சேமித்துப் பிறகு தேவையான நேரங்களில் மீண்டும் வாயு நிலையிலே பெற பல வழிகளைப் புகுத்தியிருக்கிருர்கள். இவ்வாயு எரியும்போது புகையுண்டாவதில்லை. ஆதலால் புகைப்போக்கிகளை நிர்மாணிக்க வேண்டியதில்லை. இதஞல் நாற்பது சதவிகிதம் சக்தி விரயமாகாமற் காப்பாற்றப் படுகிறது.

மற்ற எரிபொருள்களை உபயோகிக்கும்பொழுது ஏற்படும் அபாயங்கள் ஐதரசன்வாயுவை உபயோகிப்பதில் மிகக்குறைவு. மேலும் அதிக ஊடுருவும் தன்மை' மிதக்கும் தன்மை என்ற இரண்டு இயல்பினுலும் இது தீப்பற்றிக் கொண்டாலும் அத் தீ அதிக சேதத்தை விளைவிக்காது.

எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்க ஐதரசன் வாயுவை உபயோகிப்பதும் சிறந்த சக்தி வளங்களில் ஒன்ருக அமையும்.

## 101 பிள்ளைகள்

பக்தாத் நகரைச் சேர்ந்த 84 வயது கூஷஸ்ஸன் அப்துல் சதாவுக்கு 7 மனைவிகள், 101 பிள்ளைகள். இவர் தனது முதல் மனைவியை 1925ல் திருமணம் செய்தார்.

## மலரும் நினைவுகள்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

''மறக்க முடியாத சம்பவங்கள் ஏதாவது?''

போக்குவரத்து வசதிகள் குறைந்த காலத்தில் மன்னர் வவுனியா பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு படம் எடுக்கச் சென்ற போது மாணவர்கள் கமருவையும் என்னையும் மாறி மாறிப் பார்த்து, பல கேள்விகள் கேட்டு சுற்றிவருவதையும், படம் எடுக்கும் போது சிறுவர்களை ஆடாமல் அசையாமல் நிற்கவைப்பதற்குநான் கொண்ட சிரமங்களையும் என்னுல் மறக்க முடியாது.

''இந்தப் புகைப்படக்கலை பொழுது போக்கானது மட்டுமல்ல வாழ்வில் மகிழ்ச்சியைக் கொடுக்கக் 'கூடியதொன்ருகும்'' என்ருர்.

## வாசகரோடு ....

''ஈழநாடு வாரமலர் புதிய வடிவத்தில் இதழ்விரிவது கண்டு ஆனந்தம் அடைகிறேன. தொடர் நவீனம் நல்ல படிப்பினையைத் தரும் என எதிர்பார்க்கிறேன்... என அளவெட்டியிலிருந்து கு. உதயகுமார் எழுதியுள்ளார்.

வர்த்தக சங்கச் செயலாளர் மூலம் சந்தை நிலபரத்தைத் தந்தமைக்குப் பாராட்டுத் தெரிவித்த வாசகர் சி. முருகேசு அவர்கள் அரிசி விலை ஏறுமுன்பே எம்மைக் கலக்கி விட்டார் எனக் குறிப்பிட்டிருக்கிருர்.

எண் சோதிடத்தை விட இராசிப்பலனையே தரும்படி வாசகர்கள் கேட்டுவந்தார்கள். எனவேதான் மாற்றம்.

கிரந்தி எண்ணெயின் பயன் போன்ற மருத்துவத் தகவல்கள் மேலும் வரவேண்டும் என ஒரு சகோதரி எழுதியுள்ளார்.

டைப்ரைட்டர் வரலாறு போன்ற தொழில்நுட்பத் தகவல் தரும் கட்டுரைகளை நாம் வரவேற்கிறோம் எனவும் எழுதியுள்ளார்கள்.

ஆக்கபூர்வமான விமர்சனங்களை வரவேற்கின்ருேம். பூரணமாகப் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகிருேம். ஆ-ர்

## வரப்பெற்றேம்

### என்நெஞ்சில் கொண்ட ஒரு பெரியார் யோக சுவாமிகள்

இதன் ஆசிரியர் அமரர் கு. வைரமுத்து எமது பகுதியில் பலருக்கு அருளுரை தந்து வழிகாட்டியாக விளங்கிய சித்தர் யோக சுவாமிகள். அவரோடு பழகியதன் நினைவுகளை 29 தலைப்புகளில் தந்துள்ளார்கள், யோகர் சுவாமிகளின் பல வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன.

### ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம ஆண்டுமலர்

பருத்தித்துறையிலுள்ள சாரதா சேவாச்சிரமத்தின் வெளியீடு. ஆன்மீகக் கருத்துக்களைக் கொண்ட பல அரிய கட்டுரைகள் உள்ளன. சேவாச்சிரமம் ஆற்றும் பணியும் எதிர்கால வேலைத்திட்டங்களும் காணப்படுகின்றன.

### அறவழி

மாத வெளியீடு - அறவழிப் போராட்டக்குழுவின் வெளியீடு - விமரிசனங்களும் தகவல் அம்சங்களைக் கொண்டுள்ளன.

## தமிழ் இலக்கியச் சுவை

### விருந்துண்ணுமலே திரும்பிச் சென்ருர்

ஒருமுறை ஔவையார் பாண்டிய மன்னனது அரண்மனையில் நடந்த திருமணவிருந்துக்குச் சென்ருர். அங்கே விருந்துண்ணவந்தவர்கள் அதிகமாகவே காணப்பட்டனர். ஔவையாரால் அக்கூட்டத்தின் இடையே மோதிக்கொண்டு உணவு உண்ண உள்ளே செல்ல முடியவில்லை.

அங்கே நின்றவர்கள் ஔவையைப் பார்த்து ''ஏன் விருந்துண்ணுமல் திரும்பிவிட்டீர்கள்'' என்று கேட்டனர். ஔவையோ அழகாக ''உண்ட'' என்ற சொல்லைக் கொண்டே நகைச்சுவையாக ஒரு பாடலைப் பாடிவிட்டார்.

''வண்தமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்து
உண்ட பெருக்கம் உரைக்ககேன் — அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீண்பசியினுலே
சுருக்குண்டேன் சோறுண்டிலேன்'' என்ருர்.

''அங்கே நான் உணவா உண்டேன்? கூட்டத்தில் இடிபட்டு நெருக்குண்டேன். தள்ளுண்டேன். நெடியாக வருந்திய பசியினுல் உடல் சுருக்குண்டேன்... இவற்றைத்தானே உண்டேன் தவிர சோற்றையா உண்டேன்?'' என அழகாக பாடினுர்.

— அனு

## கட்டுச் சோற்றுக் கவிக்கு கருத்து விளக்கம்

கடந்த 10ம்திகதி வாரமலரில் அன்பர் காரை .செல்வராசா எழுதிய கட்டுச்சோறு பறிபோன கவிக்கு அவர்போதிய விளக்கம் கொடுக்காது வாசகர்களின் சிந்தனைக்கே விட்டுவிட்டார். இதுவும் ஓர்வகை விளக்கமே. ஆயினும் சகலருக்கும் விளங்கும்படியாக அக்கவியை எடுத்துச் சிறிது ஆராய்வோம். முதலில் பாடலை ஒருமுறை நோக்குவோம்.

சீராடையற்ற வயிரவன் வாகனம் சேரவந்து
பாராரு நான்முகன் வாகனந் தன்னைமுன் பற்றிக்கவ்வி
நாராயணன் உயர் வாகனம் ஆயிற்று நம்மைமுகம்
பாரான் மைவாகனன் வந்தே வயிற்றிற் பற்றினனே

என்பதாகும்.

இப்பாடலில் நான்கு கடவுளர்களின் பெயரும் அவர்களின் வாகனங்களும் எடுத்தாளப்பட்டுத் தமது அவலநிலையை எடுத்துக் காட்டுகிருர்,

| கடவுளர் — | இவர்களின் வாகனங்கள் | | |
|---|---|---|---|
| வயிரவர் | வயிரவருக்கு | — | நாய் |
| நான்முகன் | நான் முகனுக்கு | — | அன்னம் |
| நாராயணன் | நாராயணனுக்கு | — | கருடன் |
| மைவாகனன் | மைவாகனனுக்கு | — | அக்கினி |

இவற்றினைத் தொடர்புபடுத்தும்போது வயிரவரின் வாகனமாகிய நாய் வந்து, நான்முகனின் வாகனமாகிய அன்னத்தை (சோற்றை)ப் பற்றிக்கொண்டு கண்ணுக்குத் தெரியாமல் எங்கோ பறந்து நாராயணனின் வாகனமாகிய கருடனைப் போல உயரே சென்று மறைந்துவிட்டது — இதனுல் எல்லா வாகனங்களும் பறிபோன நிலையில் ஒரு வாகனம் அஃதாவது அக்கினிதேவனின் வாகனமாகிய அக்கினியே வந்து எம்மைப் பற்றிக்கொண்டது — அஃதாவது அக்கினிதேவனின் வாகனமாகிய அக்கினியேவந்து எம்மைப் பற்றிக் கொண்டது. அஃதாவது வயிற்றில் உதராக்கினி என்னும் பசி தோன்றி விட்டது என்பதே உட்பொருள்.

சைவப்புலவர் நயினை நாவி

## பிறமொழியிற் காணுத

(5ம் பக்கத் தொடர்ச்சி)

முதலியன.

அடுத்து ஒரு பொருள் குறிக்கும் பல சொல்லாவன; வேழம், களிறு, கரி, கைமா, நடைமலை, கைகறையடி, ஒருத்தல், அறுகு, ஆம்பல், நந்தி, தும்பி, தூங்கல் என்ற இவை அனைத்தும் ''யானை'' என்ற ஒன்றையே குறிப்பன. இவை தமிழின் சொல் வளத்தைக் காட்டுவனவாம்.

''ராம ஜெயம்'' என்பது வட மொழியிலுள்ள இரு சொற்களைக் கொண்ட ஒரு சொற்ருெடர். இதன்பொருள் என்ன? இது வேற்றுமை உருபு அற்றது ஆதலின் பொருளை விளக்காது நிற்கிறது. தமிழில் வேற்றுமை உருபு கலப்பதால் அது பொருளை நன்கு விளக்கும் வலிமையைப் பெறுகிறது.

இராமனை வெற்றி
இரானுக்கு வெற்றி
இராமனது வெற்றி
இராமனே வெற்றி
இராமனுல் வெற்றி
இராமனின் வெற்றி
இராமனிடத்தில் வெற்றி

என்று தமிழிற் கூறலாம்.

தமிழில் உள்ள சொல்வளத்தையும், பிற மொழிகளிலுள்ள சொற்பஞ்சத்தையும் காட்ட இது ஒன்றே போதுமானது.

''தமிழ், வளம் பெற்ற ஒரு மொழி. அதன் சொற்சிறப்பு ஒரு தனிச்சிறப்பு. அது என் தாய் மொழி. அதற்காக நான் பெருமையடைகிறேன்'' என்று கூற ஒவ்வொரு தமிழனுக்கும் உரிமையுண்டு. அவ்வாறு நெஞ்சு நிமிர்ந்து நின்று கூறும் உரிமையுடையவன் தமிழன் ஒருவனே.

## மடகாஸ்கார் தீவு

தென் ஆபிரிக்காவுக்குப் பக்கத்தில் இந்து சமுத்திரத்தில் இருக்கிறது மடகாஸ்கார் என்னும் தீவு. இத்தீவு கரும்புச் செய்கையில் கூடுதலான அந்நியச் செலாவணியைப் பெறுகிறது. இங்குள்ள கரும்புத் தோட்டங்களில் வேலை செய்வோரில் கூடுதலானேர் இந்தியர். அதிலும் தமிழரே அதிகமானேர். இவர்கள் மடகாஸ்கார் மொழியைச் சரளமாகப் பேசுகின்றனர். இவர்களுக்கு தமிழ்பேச அவ்வளவு தெரியாது. ஆனல் இன்னமும் தமிழர்களின் பழக்க வழக்கங்களை இவர்கள் விடவில்லை.

# ''யாழ்ப்பாண கோட்டை வடக்கு-கிழக்குமாகாணசபைக்குக்கீழ் கொண்டு வரப்படல் வேண்டும்''

## ஈ. பி. ஆர். எல். எவ். கலைஞருக்கு மகஜர்

(திருமலை)

''யாழ்ப்பாணக் கோட்டை, ஊர்காவற்றுறை கடற்கோட்டை ஆகியவற்றிலிருந்து இராணுவம், சிறைச்சாலை என்பன அகற்றப்பட்டு அவை அரும்பொருட்காட்சியகங்களாக பிரகடனப்படுத்தப்பட்டு வடக்கு- கிழக்கு மாகாண அரசின் நிர்வாகத்தின் [கீழ்கொண்டு வரப்படல் வேண்டும்.''

இவ்வாறு தமிழக முதல்வர் திரு மு கருணாநிதியிடம் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினால் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவாது:

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் நிரந்தர குடியிருப்பாளராகப் பதிவு செய்யப்படாத எவருக்கும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாக்குரிமை இருக்கலாகாது.

இலங்கையில் சிங்களவர் 73 வீதத்தினராக இருப்பதனால் பாராளுமன்ற முறையைப் பயன்படுத்தி தமிழ் பேசும் மக்களின் அரசியல், பொருளாதார உரிமைகளைப் பறித்தல் என்பது இலங்கையின் அரசியல் வரலாற்றில் சகஜமாகிப் போய்விட்ட ஒரு விடயமாகும். இந்நிலைமை இனியும் தொடரக் கூடாது. ஆகவே பாராளுமன்றத்துக்கு அடுத்தாக இலங்கையிலுள்ள சிறுபான்மை இனங்களின் அரசியல், பொருளாதார, கலாசார. பாதுகாப்பு உரிமைகளையும், நலன்களையும் பாதுகாப்பதற்காக இனங்களின் சமத்துவ பிரதிநிதித்துவத்தைக் கொண்ட இரண்டாவது சபை ஒன்று பாராளுமன்றத்தின் இனவிரோத சட்டவாக்கங்களைத் தடை செய்யும் வகையில்உருவாக்கப்படல் வேண்டும்.

புனர்வாழ்வு, புனர்நிர்மாணத்திற்காக வெளிநாடுகளும் மற்றும் சர்வதேச நிறுவனங்களும் 550 மில்லியன் டாலர்கள் அளவில் உதவுவதற்கு ஒத்துக்கொண்டுள்ளனர். அத்துடன் ஸ்ரீலங்கா அரசாங்கமும் அவ்வுதவியில் 20 சதவீதத் தொகையை சேர்த்து வழங்குதல் வேண்டும். இவ்வாறு புனர்வாழ்வு, புனர்நிர்மாண நிதியாக இலங்கை ரூபாவில் 2,500 கோடி ரூபாய்கள் வடக்கு- கிழக்கு மாகாணத்துள் சேருதல் வேண்டும். ஆனால், கடந்தகால எமது அனுபவத்தின்படி ஸ்ரீ லங்கா அரசாங்கம் இவ்வுதவித் தொகைகளை சரியான முறையில் பயன்படுத்த முடியாதபடி செய்துவருவதோடு மிகவும் நுட்பமான முறைகளில் சிங்கள மாகாணங்களுக்கு அதனைத் திசை திருப்பியும் வருகிறது. ஆகவே, புனர்வாழ்வு, புனர்நிர்மாண உதவித்தொகை முழுவதும் வடக்கு- கிழக்கு மாகாண அரசின் விருப்பத் தீர்மானிப்பின் கீழும், பயன்படுத்தும் அதிகாரத்தின் கீழும் கொண்டு வரப் படுதல் வேண்டும்.

மலையகத்தில் வாழும் தமிழர்கள் ஸ்ரீலங்கா அரசினதும் சிங்கள இனவெறியர்களினதும் அடக்கு முறைகளுக்கும்' ஒடுக்கு முறைகளுக்கும் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக முகம் கொடுத்து வருகின்றனர். இவர்களில் ஐந்து லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் ஏற்கனவே இந்தியாவுக்கு கடத்தப்பட்டு விட்டனர். எஞ்சியிருப்பவர்களோ எதிர்காலம் உறுதியற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பொருளாதார சுரண்டல்கள், புறக்கணிப்புக்கள், சிங்களக் குடியேற்றத் திட்டங்கள், சிங்கள இனவெறியர்களின் பலாத்காரமான கெடுபிடிகள் என்பனவற்றிற்கு மத்தியில் அரசியல் அநாதைகள் ஆக்கப்பட்டுள்ளார்கள். இந்நிலையை மாற்றுவதற்கு மலையகத்தில் மலையகத் தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டவகையில் ஒரு புதிய மாகாணமும், மாகாண அரசும் உருவாக்கப்படல் வேண்டும். அவ்வாறு ஏற்படுத்தப்படுகின்ற பட்சத்தில் அதேபோல கல்முனை, அக்கரைப்பற்று, [சம்மாந்துறை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணத்தை உருவாக்க தமிழர்களின் ஒத்துழைப்பு வழங்கப்படும்.

அரசியல் சட்டத்தில் எஞ்சியிருக்கும் விடயங்கள் தொடர்பான சட்டவாக்க நிறைவேற்று அதிகாரங்கள மாகாண அரசுக்கு உரியதாக இருத்தல் வேண்டும்.

இலங்கையில் நடைமுறையிலிருக்கும் பயங்கரவாத தடைச்சட்டம் இல்லாதொழிக்கப்படுவதோடு, அவசரகாலச் சட்டம் நீக்கப்படுதல் வேண்டும். அதன் கீழ் கைது செய்யப்பட்டவர்கள், வழக்குத் தொடரப் பட்டவர்கள் அனைவரும் சாதாரண குற்றவியல் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்படல் வேண்டும்.

இப்போது ஸ்ரீலங்காவின் அரசபடைகள் சிங்களப் படைகளாகவே உள்ளன. 32,000 பொலிசாரில் 1,740 தமிழ் பொலிசாரும், 64,000 பேரைக்கொண்ட முப்படைகளில் 600 பேரளவிலேயே தமிழ் பேசும் படை வீரரும் உள்ளனர். இந்நிலையை மாற்றி பல்லினங்களைக் கொண்ட இலங்கையில் சிங்கள அரசபடைகள் தேசிய அரச படைகளாக குணும்ச ரீதியான மாற்றத்திற்கு உள்ளாக்கப்படுவதற்கு அரச படைகளிலும், பொலிஸ் அமைப்பிலும் தமிழ் பேசும் மக்களின் இன விகிதாசாரத்திற்குக் குறையாத அளவில் தமிழ் பேசும் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும். மூன்று ஆண்டுகளுக்குள் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்கனவே ஸ்ரீலங்கா அரசாங்கம் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஒப்புக்கொண்டு கையெழுத்தும் இட்டுள்ளது. எனவே, முதலாவது மூன்று மாதத்துக்கள் 25 வீதத்தினரையும், 1990-ம் ஆண்டு முடிவதற்குள் அடுத்த 25 வீதத்தினரையும் 1992-ம் ஆண்டு முடிவதற்குள் எஞ்சிய 50 வீதத்தினரையும் அரச படைகளில் இணைத்து 1993-ம் ஆண்டு ஜனவரியில் இலங்கையின் அரச படைகள் தேசியத் தன்மை கொண்ட அரச படைகளாக ஆகும் நிலையை உருவாக்குதல் இதே நடைமுறை அமுலாக்கல் தேசிய பொலிஸ் அமைப்பிற்கும் பொருந்துதல் வேண்டும்.

ஏற்கனவே பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவில் ஸ்ரீலங்கா அரசாங்கமானது மாகாண அரசு 9,500 பொலிசாரை மாகாணத்தின் இன விகிதாசாரம்] பிரதிபலிக்கக் கூடிய வகையில் கொண்டிருப்பதற்கு ஏற்றுக்கொண்டுள்ளது. முதலாவது மூன்று மாதத்துக்குள் இதில் 50 வீதம் அமுலாக்கப்பட்டு 1990-ம் ஆண்டு முடிவதற்குள் முழுமையான அளவில் மாகாணப் பொலிஸ் அமைப்பு செயல்படுதல் வேண்டும்.

மாகாண அரசை உருவாக்குவதற்காகவும், சிறந்த முறையில் வளர்த்தெடுப்பதற்காகவும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானத் இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்திற்குப் பின்னர் தனது 600 க்கு மேற்பட்ட முன்னணி உறுப்பினர்களைத் தியாகம் செய்திருக்கிறது என்பதை அனைவரது கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறோம்.

ஸ்ரீலங்கா அரசுஇம்மாகாண அரசிற்கு பல முட்டுக்கட்டைகளைப் போட்டு வந்த வேளையிலும், இம்மாகாண அரசு கட்டியெழுப்பப்பட்டது என்பதனை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டுவது எமது கடமை என்று கருதுகிறோம்.

ஒரு பக்கம் எல்லாவகையான எதிர்ப்புக்களையும் எதிர்நோக்கிக் கொண்டு மறுபக்கம் இந்த மாகாண அரசை ஏற்றுக் கொண்ட நாள்தொட்டு அதற்குரிய அதிகாரங்களைப் பெறுவதற்காக தொடர்ந்தும் விடாப்பிடியாகப் போராடி வந்திருக்கிறோம். ஆனால் ஸ்ரீலங்கா அரசாங்கமோ அதிகாரப் பரவலாக்கல் என்ற விடயத்தையும், இந்திய அமைதி காப்புப்படை இல்லாத சந்தர்ப்பத்திலும் தமிழ் பேசும் மக்கள் பாதுகாப்பு உணர்வுகளோடு வாழ்வதற்குரிய நிலைமைகளை ஏற்படுத்தும் விடயத்தையும் அரசியல் அரங்கிலிருந்து முற்றாகப் பிந்தள்ளி விடுவதற்கு சகல வகையான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. தமிழர்களைத் தமிழர்களைக் கொண்டே அழிக்கும் தந்திரத்திலும சிறப்பாக ஈடுபட்டு வருகிறது. இவ்விடயங்களைப் புரிந்தும் புரியாதவர்கள்போல் நாம் இருக்க முடியாது.

தமிழ் பேசும் மக்களின் நல்வாழ்விற்கும், நம்பிக்கையான எதிர்காலத்திற்கும் நாம் முன்வைத்துள்ள பிரேரணைகளின் அவசியத்தை எவராலும் புரிந்து கொள்ள முடியுமென நாம் கருதுகிறோம்.

நாம் ஏற்கனவே மேலே பத்தொன்பது அம்ச அடிப்படைகளுடன் முன்வைத்த அதிகாரப் பரவலாக்கல் பற்றிய விடயங்கள் உள்ளடங்கிய வகையில் தயாரிக்கப்படுகின்ற அரசியல் தீர்வுத் திட்டத்தை ஸ்ரீலங்கா அரசு ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் (அது தொடர்பாக இந்தியாவோ, தமிழக அரசோ. தமிழர் கட்சிகளோ ஒரு அரசியல் நிலைப்பாட்டைத் தீர்மானிக்காத பட்சத்தில்) இம் மாகாண சபையைக் கலைப்பதற்கும், புதிய மாகாண சபைத் தேர்தலை நடாத்துவதற்கும் நாம் ஒத்துக்கொள்வதானது எமது கையைக் கொண்டே தமிழ பேசும் மக்களின் தலையில மண்ணை வாரிப் பாடுவதற்ஸ்ரீலங்கா அரசு எடுத்துவரும் முயற்சிகளுக்கு நாம் துணை போவதற்கு சமமாகும் என உறுதியாக நம்புகிறோம்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி புரியும் இந்த ஸ்ரீலங்கா அரசாங்கமானது இந்த மாகாண சபையைப் பலப்படுத்துவதிலும், அதற்குரிய அதிகாரங்களைப் பெறுவதிலும், தமிழர்களுக்குரிய நிரந்தரப் பாதுகாப்பை ஏற்படுத்துவதிலும நாம் எடுத்த அனைத்து முயற்சிகளையும் தனது அரசியல், இராணுவ ராஜதந்திர நடவடிக்கைகள் மூலமும், பிரச்சார தந்திரங்கள் மூலமும் வெற்றிகரமாக முடக்கிவிட்டதாகக் கருதக்கூடும். ஆனால் இலங்கைத் தீவில் வாழும் தமிழ் பேசும் மக்கள் சுதந்திரமாகவும் ஜனநாயக உரிமைகளோடும் வாழுகின்ற நிலைமைகளை ஏற்படுத்த பல பத்தாண்டுகள் போரிட நேரிட்டாலும் அதனை ஏற்படுத்தியே தீருவோம் என்ற உறுதியுடனும் நம்பிக்கையுடனுமே நாம் செயல்பட்டு வருகின்றோம்.

---

**சமய**

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கோடீஸ்வரன் உட்படப் பலர் உரையாற்றினர்கள்.

சமய அறிவுப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம்:

ஆரம்ப பிரிவு: செல்வி சத்தியபானு. மா. நிரோஜினி- செல்வி க நளாயினி.

கீழ்ப்பிரிவு: செல்வன்: ஐ கரிகரன், செல்வன் எஸ். ஸ்ரீ கைலைநாதன், செல்வி ஆ.கு. ஜெயராசா.

மத்திய பிரிவு; செல்வி க. ரேணுகா, செல்வி அ. பி சுகந்தினி, செல்வி வீ. சிவதர்சினி.

மேற்பிரிவு: செல்வி சே. வளர்மதி, செல்வன் சரவணபவானந்தன், செல்வி வி. விநோதினி.

---

# ''சைவநெறி சமயநெறி மட்டுமல்ல அது ஒரு வாழ்க்கை நெறியுமாகும்''

[பண்டத்தரிப்பு]

''சைவநெறி ஒரு சமய நெறி மாத்திரமல்ல, அது ஒரு வாழ்க்கை நெறியும் ஆகும். வாழ்க்கையில் அமைதியும், நிறைவும் ஏற்படுவதற்கு இறைவழிபாடு அடிப்படையானதொரு அம்சமாகும். சிவநெறியில் நின்று இறைவழிபாடு செய்வோமானால் எமது வாழ்வு வளம் பெறும்என்பதில் ஐயமில்லை.'' இவ்வாறு திருக்கேதீஸ்வரம் ஆலய திருவாசக மடத்தில் அண்மையில் நடைபெற்ற சைவநெறித் தொண்டர் கழக மன்னார் மாவட்டத் தொண்டர்களுக்கான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய சைவநெறிக் தொண்டர் கழக ஆணையாளரும், பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அலுவலகக் கல்வி அதிகாரியுமான திரு. க. மகேசன் குறிப்பிட்டார்.

கழகத்தின்மன்னார்மாவட்ட ஆணையாளர் திரு. வ ஸ்ரீபதி தலைமையில் இரு தினங்கள் நடைபெற்ற இக்கருத்தரங்கில் சிவபூசையும், திருமுறை ஓதுதலும், சைவ நெறியின் சிறப்பு அம்சங்கள், சைவ மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள், சைவநெறியை வளம் படுத்துவதற்கான வழிமுறைகள் ஆகிய பல்வேறு தலையங்கங்களில் விரிவுரைகளும், கருத்துரைகளும், கலந்துரையாடல்களும் நடாத்தப்பட்டன.

திரு. மகேசன் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் ''வழிபாடு என்பது நீரும் பூவும், திருநீறும், திருமுறைகளும் கொண்டு சிவ பூசை செய்வதைக் குறிக்கும். எமது பன்னிரு திருமுறைகளை நன்கு கற்று, அதன் உண்மையான கருப்பொருளை அறிந்து கொண்டால் அதன் மகத்துவத்தை நாம் நன்கு உணர்ந்து கொள்ளமுடியும். ஆலயங்களுக்குச் சென்று தான் சிவ வழிபாடு செய்யவேண்டும் என்பதில்லை, வீடுகளிலும் தனியிடம் அழைத்து உள்ளன்போடு வழிபட்டால் சிவ அருளைப் பெறலாம். வீடுகளில் நன்நெறியில் சமய வாழ்வு வாழ்ந்தால் நாட்டிலும் அமைதியும், சாந்தியும் ஏற்படும்.'' என்றார். (72)

---

## திருத்தப்படாத வீதி

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலைக்குச் செல்லும் வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாத நிலையில் போக்குவரத்திற்குச் சீர்கெட்டநிலையில் உள்ளது. இதனால் இவ் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்களும், பொதுமக்களும் மிகுந்த சிரமமடைகின்றனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு இந்தவீதியைத் திருத்துவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுக் கற்களும் பறிக்கப்பட்டது பின்பு வீதி திருத்த ஒப்பந்தமும ரத்துச் செய்யப்பட்டது இதுவரை இவ்வீதி திருத்தப்படாத நிலையிலிருந்து வருகின்றது.

---

## பதவி உயர்வு

(பருத்தித்துறை)

வலி-தெற்கு பிரதேசசபை வருமான பரிசோதகா திரு. எஸ் சுப்பிரமணியம் பதவி உயர்த்தப்பட்டு பருத்தித்துறை நகரசபைக்கும், பருத்தித்துறை நகர வருமான பரிசோதகர் திரு என். செல்வராசா யாழ்ப்பாண மாநகர சபைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (52)

---

நெல் சந்தைப்படுத்தும் சபை

# ஊழியர்கள் பத்து வருடமாகியும் நிரந்தரமாக்கப்படவில்லையாம்!

(கிளிநொச்சி)

கடந்த பத்து வருட காலமாக வடபிராந்தியநெல் சந்தைப்படுத்தும் சபையில் தற்காலிகமாகப் பணிபுரியும் ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படாதது குறித்துப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது வேலை நிரந்தரமாக்கப்படாமையால் ஏனைய அரச கூட்டுத்தாபன ஊழியர்கள் அனுபவிக்கும் உதவிகள், சலுகைகள் மறுக்கப்பட்டு வருவதாகவும் இந்த ஊழியர்கள் ஈழநாடுவிற்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமது சேவை மூப்பையும் கருத்திலும் கவனத்திலும் எடுத்து நிரந்தர நியமனம் கிடைக்க ஆவன செய்யுமாறு நெல் சந்தைப்படுத்தும் சபை வடபிராந்திய ஊழியர்கள் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுள்ளனர். (83)

## வலிகாமம் மேற்கு உ. அ. அ. பிரிவு வருடாந்த விளையாட்டுப் போட்டி

### மார்ச் 17, 18ல் சுளிபுரத்தில் நடைபெறும்

(சித்தன்கேணி)

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு வருடாந்த விளையாட்டுப்போட்டி இம்மாதம் 17-ம், 18-ம் திகதிகளில் சுளிபுரம் விக்ரோறியாக்கல்லூரியில் நடைபெறவுள்ளது

உதவி அரசாங்க அதிபர் திரு து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற இருக்கும் இந்த விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் க. சண்முகநாதனும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. க. ஏகாம்பரமும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ்விளையாட்டுப் போட்டியில சிறப்பு நிகழ்ச்சியாக வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கிடையே ஆண்களுக்கான 25 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியும் 10 மைல் மரதன் ஓட்டப்போட்டியும் பெண்களுக்கான 3 மைல் மரதன் ஓட்டப் போட்டியும் நடைபெறவுள்ளது.

சைக்கிள் ஓட்டப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் இம்மாதம் 10-ம் திகதிக்கு முன்னர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் ரூபா 25/- ஐச் செலுத்தி விண்ணப்பப்படிவத்தை பெற்றுக் கொள்ளலாம்.

மரதன் ஓட்டப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் தமது பெயர்களை பத்து ரூபா செலுத்தி இம்மாதம் 10-ம் திகதிக்கு முன்புபதிவு செய்து கொள்ளவேண்டும்.

சைக்கிள் ஓட்டப்போட்டியும் மரதன் ஓட்டப்போட்டியும் 18-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7-00 மணியளவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இருந்து ஆரம்பமாகவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் உதவி அரசங்கஅதிபர் திரு. து. வைத்திலிங்கமும் விளையாட்டு அதிகாரி திரு. கே. பீலிக்ஸ் அவர்களும் சகல கிராமசேவை அலுவலர்களும் மேற்கொண்டுள்ளனர். (137)

## "மாணவர் உடல் வளர்ச்சிக்கு விளையாட்டுத்துறை அவசியம்"

(பண்டத்தரிப்பு)

"மாணவர்கள் கல்வியில் மட்டுமன்றி விளையாட்டு, உடற்பயிற்சி, சாரணீயம், முதலுதவி, சமூகசேவை ஆகியவற்றிலும் பங்குபற்றி தேர்ச்சி பெற்றிருக்வேண்டும். இவற்றிற்கான சான்றிதழ்களை பெற்றிருப்பதன்மூலம் வேலைவாய்ப்புகளையும் பெறக்கூடியதாக இருக்கும். அண்மையில் நடைபெற்ற பயிலுநர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சையின் போது இதுபோன்ற சான்றிதழ்களுக்கு அதிகளவு புள்ளிகளை பலர் பெற்றுக்கொள்ள முடிந்தது. பாடசாலை மட்டத்தில் நடைபெறும் சகல போட்டிகளிலும் மாணவர்கள் தவறாது கலந்து தங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்தி முன்னேற்றம் காணவேண்டும்."

இவ்வாறு பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி வருடாந்த மெய்வல்லுநர் போட்டியில் பிரதம அதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அலுவலக உதவி கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. வி. நாகராஜா தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் திரு. சிவானந்தம் தொடர்ந்து உரையாற்றுகையில், "தற்போது ஒரு குறிப்பிட்ட காலத்தில் விளையாட்டுப் போட்டிகளையும், மெய்வல்லுநர் போட்டிகளையும் பாடசாலைகள் மட்டத்திலும், அதனைத் தொடர்ந்து கொத்தணி, கோட்டக்கல்வி மட்டத்திலும் நடாத்தி முடிக்கவேண்டியுள்ளது. இந்த முதலாம் தவணையில் இந்தப் போட்டிகளை நடாத்தி முடிக்க திட்டமிட்டு செயலாற்றி வருகின்றோம்.

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு பக்கத்திலுள்ள காணியில் எமது புதிய கோட்டக்கல்வி அலுவலகம் 15 லட்சம் ரூபா செலவில் நிறுவப்படவுள்ளது. இதனால் இக்கலூரியின் அந்தஸ்தும் உயரும் என்று நம்புகிறேன்.

கல்லூரி அதிபர் திரு. நாகராஜா தலைமை வகித்து உரையாற்றுகையில், "மாணவர்கள் வெற்றி தோல்வியை சமமாகக் கருதும் அனுபவத்தைப் பெறவும், திடமான உடலுறுதியைப் பெறவும் இதுபோன்ற போட்டிகள் உதவுகின்றன" என்றார். போட்டிகளில் சேரன் இல்லம் 303 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், பாண்டியன் இல்லம் 301புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், சோழன் இல்லம் 289 புள்ளிகளைப் பெற்று மூன்றுமிடத்தையும் பெற்றன. ஆசிரியர் திரு. தவராசா நன்றி கூறினார்.

## புலோலி ஞானவைரவர் கோயில் கும்பாபிஷேகமலர் வெளியீடு!

(பருத்தித்துறை)

புலோலி-கிழக்கு அருள்மிகு உத்திராவத்தை ஞானவைரவர் ஆலய மகாகும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது.

மண்டலாபிஷேக தினத்தன்று குடமுழுக்கு விழா மலர் வெளியிடப்பட்டது.

இம்மலர் வெளியீட்டு விழாவிற்கு திரு. என். சின்னையா தலைமை தாங்கினார்.

இம்மலரை திரு. எஸ் கந்தையா, திரு. என். சின்னையா ஆகியோர் தொகுத்திருந்தனர்.

நாலுக்கு நல்லை ஆதீன குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் ஆசியுரை வழங்கியிருந்தார். (52)

### 'றுக்கிங்'கை நிறுத்தி

## மாணவர்களை அன்புடனும், நட்புடனும் வரவேற்போம்!

### முற்போக்கு மாணவர்கள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

"துன்புறுத்தல் பண்பாட்டை எம்மத்தியில் இருந்து ஒழித்து புதிய மாணவர்களை அன்புடனும் பண்புடனும், நட்புடனும் வரவேற்போம்" என்று முற்போக்கு மாணவர்கள் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'றுக்கிங் துன்புறுத்தல்களை நிறுத்துவோம் புதிய மாணவர்களை அன்புடன் வரவேற்போம்'' என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

றுக்கிங் என்ற பகிடிவதை நிகழ்ச்சி, பல்கலைக்கழகங்களிலும் உலகில் பல இடங்களிலும் நிகழ்கின்றது. இலங்கையைப் பொறுத்தவரை மேற்கத்திய நாட்டவரிடமிருந்து நாம் கற்றுக்கொண்ட பல நல்ல விடயங்களுடன் கற்றுக்கொண்ட தீய கலாச்சார பண்பாக இந்நிகழ்ச்சி பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் ஆதிக்கம் செலுத்துகின்றது.

இந்நிகழ்ச்சியால் பல மாணவர்கள் கடும் சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளனர். பல பெண்கள் 'பாலியல்' வன்முறைக்கு உள்ளாகியுள்ளனர். றுக்கிங்கை தாங்க முடியாது பலர் தற்கொலை செய்துள்ளனர். இலங்கை அரசும் தற்காலத்தில் இயக்கங்களும் றுக்கிங்கைத் தடைசெய்தபோதும், புதிய மாணவர்கள் இறுக்கிங் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டே வந்துள்ளனர்.

றுக்கிங் என்பது எந்த நோக்கத்தைக் கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளின் அதன் தவற்றைக்யும் அதை எதிர்க்க வேண்டியதன் அவசியத்தையும் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ளலாம். ஒரு புதிய மாணவரை உடல்ரீதியாகவும், உளரீதியாகவும் துன்புறுத்துவதன் மூலமும். சங்கடப்பட வைத்தல் மூலமும், வேடிக்கைகுரியவர் ஆக்குவதன் மூலமும் அடிபணிய வைத்தல் மூலமும் பழைய மாணவர்கள் மகிழ்ச்சி அடைவதே றுக்கிங்கின் அடிப்படை நோக்கமாகும்.

ஒரு மனிதன் ஒரு துன்புறுத்தல் மூலமோ வேடிக்கைக்குரியவனாகியோ பார்த்து மகிழ்வது மிகவும் கேவலமான மனோபாவம் என்பதுடன், ஒருவருடைய சுயமரியாதையைப் பறிப்பதும், அடிப்படை மனித உரிமை மீறலுமாகும். இத்தகைய குறுகிய மனோபாவமே உலகின் பல பிரச்னைகளுக்கும் அடிப்படையாகின்றது.

றுக்கிங்கை நியாயப்படுத்துவோர் கூறும், சில நியாயங்களைப் பார்ப்போம். திறமைகளை வெளிக்கொணர்தல். தோழமையை வளர்த்தல், புரிந்துணர்வை வளர்த்தல் வெட்கப்பட்டு பின் வாங்கலை நீக்குதல்சமூகத்தின்வெவ்வேறு மட்டத்தில் இருந்து வருபவர்களின் உணர்வுகளை ஒரே மட்டத்திற்குக் கொண்டு வருதல் போன்ற காரணங்களைக்கூறி, தமது ஒரே மனோபாவத்தை மறைக்க முற்படுகின்றனர், ஏதோ தாம் பழைய மாணவர்கள் என்பதாலேயே தாம் எல்லாவற்றிலும் வளர்ச்சி அடைந்து விட்டார்கள் என்று கருத முடியுமா? இக்குறைபாடுகள் பழைய மாணவர்களிடமும் கூட இருக்கலாம். றுக்கிங்கின் ஊடாக இத்தகைய முன்னேற்றத்தைச் செய்யலாம் என்பது சுத்த அபத்தமாகும். எந்த ஒரு விடயத்தையும் யாரிடமும் திணித்துவிட முயற்சிப்பது எமது அறியாமையும், அதிகாரத்துவ மனோபாவமுமேயாகும். மேலும் இத்தகைய திணித்தல் முயற்சிகளால் மாணவர்கள் மத்தியில் நல்லுறவுகளே பாதிக்கப்படுகின்றன. றுக்கிங் துன்புறுத்தல்களைச் செய்துவிட்டு அவர்களுக்கு விருந்து வைத்து வரவேற்பதால் நல்லுறவுகள் வளர்ந்துவிடுவதில்லை. இது மேலும் அவர்களைக் கேவலப்படுத்துவதாகும். (து)

### தமிழ் மக்களின்

## கலை, கல்வி, கலாசாரங்கள் வளர்க்கப்படவேண்டும்!

(வட்டுக்கோட்டை)

எமது தமிழ் மக்களின் கல்வி, கலை, கலாசாரங்கள் வளர்க்கப்படவேண்டும். இவற்றைக் கிராமங்கள் தோறும் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், கலா மன்றங்கள்தான் முன்னின்று வளர்க்க வேண்டும். கிராமங்கள் தோறும் இலைமறை காயாக இருக்கும் கலைஞர்களை வெளிக்கொணரும் வகையில் நிகழ்ச்சிகளை நடாத்தி அவர்களைப் பாராட்டவேண்டும்".

இவ்வாறு வட்டுக்கோட்டை அறிவொளி சனசமூக நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் குறிப்பிட்டார்.

நிலையத் தலைவர் திரு. த. செல்வராசா தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

திரு. து. வைத்திலிங்கம் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதவது:

வட்டுக்கோட்டைப் பகுதியிலே அறிவொளி சனசமூக நிலையம் பலதுறைகளிலும் சிராம மக்களுக்குத் தொண்டாற்றுகின்ற ஒரு சிறந்த நிலையமாகத் திகழும் என நான் நம்புகின்றேன். இந்த நிலையத்தின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் என்னாலான உதவிகளைத் தவறாது செய்வேன். சங்க நிர்வாகிகள் தன்னலம் கருதாது அயராது உழைக்க முன்வரவேண்டும்', என்றார்.

வட்டுக்கோட்டை கிழக்கு கிராமசேவை அலுவலர் திரு. ம. ஸ்ரீமுருகவேல், செல்வி சிவனேஸ்வரி ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினாகள்.

நிலையச் செயலாளர் திரு. சிவலிங்கம் நன்றியுரை வழங்கினார். (139)

### சகல போட்டிகளிலும்

## மாணவர்கள் பங்கு பற்றி ஆற்றலை வெளிப்படுத்தவேண்டும்

(புலோலி)

"அபிவிருத்தியடைந்த நாடுகளும், அபிவிருத்தியடையாத நாடுகளும் புகழ்பெற்று வருவதற்கு விளையாட்டுத் துறையே முக்கிய காரணமாகும்" இவ்வாறு வடமராட்சி கோட்டக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொன். வீரபத்திரன் நாகர்கோவில் மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப்போட்டிக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

வித்தியாலய அதிபரும், நாகர்கோவில் கொத்தணி அதிபருமான திரு. க. பரமகுரு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் திரு. பொன். வீரபத்திரன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

உலகநாடுகள் ஒவ்வொன்றும் ஏதாவது ஒரு விளையாட்டில் முன்னணி வகிப்பதை அறியலாம். அத்துடன் இப்போட்டிகளில் புகழ் பெற்றும் வருகின்றன. இருந்தாலும் அகில உலக கிண்ணத்துக்கான விளையாட்டுப் போட்டிகளின்போது கீழைத்தேய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் காலத்துக்குக்காலம் தமது திறமைகளை விளக்கிக் காட்டுவதை அறிவீர்கள்.

இத்திறமைக்குக் காரணம் இடைவிடாத பயிற்சியேயாகும்.

அதேபோல் கல்வித்துறையிலும் முன்னணி வகிப்பதற்கு இடைவிடாத பயிற்சி அவசியமாகும்.

மாணவர்களின் உடல் உளவளர்ச்சியைக் கருதி அடுத்த ஆண்டு முதல் வடமராட்சி கோட்டப்பகுதியிலுள்ள சகல பாடசாலைகளிலும் உடற்பயிற்சி, விளையாட்டு இசை, நடன, நாடகப்போட்டிகள் கண்டிப்பாக நடத்தப்படவேண்டும். இப்போட்டிகளை நடத்தாத பாடசாலைகள்மீது நடவடிக்கை எடுக்கப்படும். (61)

## வல்லிபுர ஆலய தர்மகர்த்தா சபை

(பருத்தித்துறை)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவராக திரு. இ. அன்னலிங்கமும், செயலாளராக திரு. வீ. எஸ். தேவதாசனும் தெரிவு செய்யப்பட்டனர்.

மகாசபைத் தலைவராக திரு. எம். கந்தசாது தெரிவானார்.

திருப்பணிச் சபை உறுப்பினர்களாக திருவாளர்கள் எஸ். அமிர்தலிங்கம், எஸ் பாக்கியநாதன், எஸ். இராசேந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். [52]

## யாருடையது?

யாழ்ப்பாணம் பிரதானவீதிக்சுருகாமையில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த செல்வன் உதயகுமார் என்பவரின் மக்கள் வங்கி சேமிப்புப் புத்தக திரு. ஆர். எஸ். பாலசுப்ர மணியத்தால் கண்டெடுக்கப் பட்டு 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சியுடன் பெற்றுக்கொள்ளவும்.

## உள்ளூர்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

நாமத்தை நிலைநாட்டுகின்றனர் என்றார்.

திருமதி வி. சிவகுருநாதன் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார்.

கந்தையா இல்லம் 1ம் இடத்தையும், மழவராயர் இல்லம் 2ம் இடத்தையும் பொன்னம்பலம் இல்லம் 3வது இடத்தையும், தில்லைநாதர் இல்லம் 4ம்இடத்தையும் பெற்றுக் கொண்டது. (74)

## சான்றிதழ் வழங்கும் விழா

(பண்டத்தரிப்பு)

மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை திங்கட்கிழமையன்று வட்டுக்கோட்டை தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. யூனிசெவ் நிறுவன பிரதிநிதிகள் குழுவும் இவ்வைபவத்திற்கு சமுகமளிப்பார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## "புலவர் தேறல்" நூல் வெளியீடு

[யாழ்ப்பாணம்]

சைவப்புலவர் சி. வல்லிபுரத்தின் அந்தியேட்டித்தினத்தன்று "புலவர் தேறல்" என்ற நூல் வெளியிடப்பட்டது. திரு. க. முருகேசு தலைமையில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி, கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர், திரு. தெணியான் ஆகியோர் பங்குபற்றினர். (ம)


# SPOKEN ENGLISH

## பேச்சு ஆங்கிலப் பயிற்சியில் நூற்றுக்கணக்கான மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்ற

# Bright Training Centre

அடுத்த கல்வி முயற்சி

## கடைக்கணக்கு எழுதும் முறை

## (METHOD OF BOOK-KEEPING)

## தபால் மூலம் கல்வி

கடைக்கணக்கு முதல் கம்பனி கணக்குவரை எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதை மிக இலகுவான முறையில் ஆரம்பத்திலிருந்து கற்றுத் தரப்படும். இது ஆறுமாத கால டிப்ளோமா பயிற்சியாகும்.

இன்று நாட்டில் கணக்குப் பதிவாளர் (Book-keeper) கணக்கு லிகிதர் (Accounts Clerk), கணக்குப் பரிசோதகர் (Audit Clerk) ஆகிய வேலைகளுக்குப் பல வெற்றிடங்கள் உள்ளன. எமது பயிற்சியினை மேற்கொள்வதன் மூலம் சிறந்த தொழில் ஒன்றை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

கணக்குப் பதிவியல் துறையில் லண்டன் (London) பட்டம் பெற்றவரும் பதினைந்து வருடகால கணக்கு எழுதும் துறையில் அனுபவம் பெற்றவரின் அனுசரணையுடனே இப்பாடங்கள் யாவும் தயாரிக்கப்பட்டதாகும். இப்பயிற்சியினைத் திறம்படச் செய்து முடிப்பவர்க்குச் சிறந்த தொழிலினைத் தேடித் தரக்கூடிய சிறந்த நற்சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கட்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் சுய விலாசத்தையும் எழுதித் தொடர்புகொள்க.

**புது அறிவொளி** விலை ரூபா 5/-மட்டும்

வெளிவந்து விட்டது எமது கல்வி நிறுவனத்தின் கலை இலக்கிய கல்வி இதழ், பிரபல்ய புத்தகக் கடைகளில் கிடைக்கும். நேரடியாகப் பெற விரும்புவோர் ஒரு ரூபா பெறுமதியான ஆறு முத்திரைகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

● யாழ்ப்பாணத்தில் பஸ் நிலையத்துக்கு அருகாமையிலுள்ள சகல கடைகளிலும் புது அறிவொளி இதழ் விற்பனைக்கு உண்டு.

**SPOKEN SINHALA**

**BRIGHT TRAINING CENTRE**

நிறுவனத்தினர் மிக இலகு நடையில் அமைந்த தபால் முறையில் மிகச்சிறந்த பயிற்சி நெறியினை அறிமுகப் படுத்துகிறார்கள்.

உளவியல் அடிப்படையில் மிகமிகப் புதுமையான முறையில்

**'SPOKEN SINHALA'**

பயிற்சி நெறியினை மூன்றே மாதங்களில் கற்றுத்தேறலாம்.

**BUSINESS ENGLISH**

வியாபார ஆங்கிலம் இரண்டு மாத பாடத்திட்டம் இதில் சேருவோர் கடிதம் எழுதும் முறை, வேலைகளுக்கு விணணப்பப்படிவம் எப்படித் தயாரித்தல் என்பனவும் மற்றும் வியாபார உலக அன்றுடப் பாவனை ஆங்கில வாக்கியங்களையும் உள்ளடக்கிய பாடத்திட்டம்.

மேலதிக விபரங்கட்கு முத்திரையொட்டிய தபால் உறையுடன் சுய விலாசத்தையும் எழுதித் தொடர்பு கொள்க.

எமது கல்வி நிறுவனம் அறிமுகப்படுத்தும் மூன்று மாதத்தில் பேச்சு ஆங்கிலம் எனும் பயிற்சியினை இலங்கையில் உள்ள பல பாகத்தினரும் தபால் மூலம் பயின்று பயன் பெற்றுள்ளார்கள். எமது பயிற்சி நெறியானது, மாணவர்களை அறிந்து அவர்களுக்கு இன்று அத்தியாவசியமாகத் தேவைப்படுவது என்ன என்பதை உளவியல் ரீதியில் ஆராய்ந்து அதன்படி தயாரிக்கப்பட்டதே எமது கல்வி நெறியாகும். எனவேதான் மாணவர்கள் எல்லோரும் மற்றைய பயிற்சிகளை விட பிறைட் பயிற்சி நிறுவன "ஆங்கில பேச்சு பயிற்சி" சிறப்பானது எனக் கூறுகிறார்கள்.

முழுக்க முழுக்க மாணவர்களின் நலன் கருதி தயாரிக்கப்பட்டதே எமது பயிற்சியாகும். இது வரை எம்மிடம் பயின்ற மாணவர்கள் தாம் பெற்ற பலாபலனை மற்றையோரும் பெறவேண்டும் எனக் கருதிப் பலர் தங்கள் சிநேகிதர்களையே அறிமுகப்படுத்தி உள்ளார்கள். அது மாத்திரமின்றி பலர் தாம் பெற்ற இன்பம் (படிப்பு) அதை எம்முடன் பகிர்ந்தும் உள்ளனர். இத்தோடு வேறு பலர் இப்படிப்பை முடித்துவிட்டு எம்மால் அறிமுகப்படுத்தப்பட்ட வியாபார ஆங்கிலம் எனும் திட்டத்திலும் இணைந்துள்ளனர். மாணவர்கள் மதிப்பே ஒரு கல்வி நிறுவனத்தின் புகழ் என்றல் மிகையாகாது. அதனை மாணவரிடம் பெற்ற ஒரே நிறுவனம் பிறைட் பயிற்சி நிறுவனமேயாகும்.

**எம்மிடம் 90 நாட்களில் ஆங்கிலம் பயின்ற சிலரின் கருத்துக் குவியல்களை பார்ப்போம்**

1. ஆங்கிலப் பாடத்தின் முக்கியத்துவத்தை எமக்கு வெளியிட்டது பிறைட் றெயினிங் சென்ரர். எல்லோரும் "காசைக் கட்டி வீணுக ஏமாறப்போகின்ருய்" என்று கூறினுர்கள். தங்கள் பயிற்தி நிலயம் எனது பணத்திற்கு மேலாக ஆங்கில வளத்தை அள்ளித் தந்துள்ளது. 2327

செல்வி கலைவாணி குமாரசாமி
28/3, முரசுமோட்டை, பரந்தன்

2. உங்களுடைய கல்வித்திட்டம் பற்றி என்னுடைய சிபார்சின் பேரில்தான் செல்வி S. ஜெயந்தி என்பவர் உங்களிடம் பயிலுகின்ருர். உங்கள் ஒரு மாத பாடத்திலேயே அவரை நான் அறிமுகம் செய்து வைத்தேன். இன்னும் பலரை இக் கல்வித்திட்டத்தில் சேரும்படி கேட்டுக்கொண்டே இருக்கிறேன். 2147 T

செல்வி மேரி யோகராணி
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

15. சர்வதேச மொழிகளில் ஒன்ருன ஆங்கிலத்தை எமக்கு விளங்கக்கூடிய வகையில், இலகுவான குறையில் அமைத்துத்தந்த Bright Training Centreன் பணி மேலானது. வேறு ஏதாவது பாடத்திட்டம் அறிமுகப் படித்துவதாயின் எமக்கு அறியத்தரவும்.

செல்வி ரஜனி பொன்னம்பலம்
"ராணி பவனம்",
சேந்தாங்குளம், இளவாலை

16. தங்களது பாடத்திட்டம் எமக்குத் தகுந்த பலன் அளித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்ேறாம். (1957)

S. Bhavani
New Road,
Karainagar.

17. I have fulfilled the conditions. I am very happy now. Because I can read and write English very well now.

Miss T. Chandrka
"Saraswatha Shade",
Goodshed Road,
Kondavil.

19. தங்கள் கல்வி நிலயத்தில் நானும் ஒரு மாணவியாகச் சேர்ந்து படித்ததில் பெருமை அடைகிறேன். உங்களது ஒவ்வொரு பாடத்தொகுதியும் படிக்க மிகவும் இலகுவாகவும், உற்சாகமாகவும் உள்ளது. இப்படியான ஒரு பாடத்திட்டத்தைத் தயாரித்துத் தந்த உங்களுக்கு எனது பாராட்டும் நன்றியும் உரித்தாகுக.

செல்வி லிங்கேஸ்வரி தட்சணுமூர்த்தி
கலைவாணி வீதி, வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

# BRIGHT TRAINING CENTRE

**P. O. BOX 162, COLOMBO.**

(ஏ 783)


## இடமாற்றம்

[மானிப்பாய்]

யாழ். செயலக கணக்குக் கிளையில் கடந்த பல ஆண்டுகளாக லிகிதர் தரத்திலிருந்து பணியாற்றிய செல்வி இந்திரா மாணிக்கம் தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கும், திருமதி சிவகுருநாதன் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கும் இம்மாதம் முதல் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

இவர்களது சேவைகளைப் பாராட்டி நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் தேநீர் விருந்துபசார வைபவமொன்று இடம்பெற்றது. [71]

## தாமரை இல்லம் முதலிடம்

(மன்னுர்)

தலைமன்னுர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் பாடசாலை அதிபர் திரு. எஸ். ஏ. மிரண்டா தலைமையில் இடம் பெற்றது. பிரதம அதிதியாக பேசாலை கொத்தணி அதிபர் திரு. எஸ். ஆர். சிறில் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினுர்.

## தூசுகளால் விவசாயிகள் பாதிப்பு

(கோப்பாய்)

கோப்பாய்-கைதடி வெளியில் இயங்கிவரும் கல்லுடைக்கும் இயந்திரங்களினுல் (கிறேசர்) எழும் தூசு அண்மையிலுள்ள மின் கம்பி இணைப்புகளில்சென்று படிவதனுல் அடிக்கடி மின்தடை ஏற்பட்டுவருகின்றது. இதனுல் நீர்வேலியிலுள்ள தொழிறசாலைகள்பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

கோப்பாய் - கைதடி வெளியை அடுத்துள்ள விளைநிலங்களும் இதனுல் பாதிக்கப்படுகின்றன. இது பற்றி இப்பகுதியில் விவசாயம் செய்யும் விவசாயிகள் பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிட்டும் எதுவித பலனும் கிடைக்கவில்லை.

## பழைய இடத்தில் தபால்நிலையம்

(பருத்தித்துறை)

புலோலி தபால்நிலையம் மீண்டும் மந்திகையில் தபால் நிலையம் முன்னர் இயங்கிய கட்டிடத்தில் கடந்த சனிக்கிழமை முதல் இயங்கத் தொடங்கியுள்ளது.

மந்திகையில் இந்திய இராணுவமுகாம் இயங்கியமையால் புலோலி தபால் நிலயம் கிராமக்கோட்டடியில் உள்ள கட்டிடமொன்றில் இயங்கிவந்தது.

தற்போது இந்திய இராணுவ புலோலிமுகாம் மூடப்பட்டதையடுத்து புலோலி தபால் நிலையம் மீண்டும் பழைய இடத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. (25)

## சைவசமய அபிவிருத்தி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி குருகுல இயக்குநர் சபையினர் சைவசமயம் அபிவிருத்தி கருதி பல்வேறு வகையான செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்தியுள்ளனர்.

இதன் முன்ேனுடி நடவடிக்கையாக இந்து இளைஞர் மன்றம் அமைத்தல் சைவத் தொண்டர்களிற்கான கருத்தரங்கு, குருகுலத்தில் சைவ நூலகம் கிராமங்கள் தோறும் சைவபாடசாலைகள் முதலானவற்றை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக குருகுல இயக்குனர் சபையாகிய கரைச்சி சைவவித்தியாவிருத்திசபை தலைவரும் கிளிநொச்சி செயலக உதவி அரசாங்க அதிபருமான க. துரைராசா தெரிவித்தார். (83)

# ஒரு தலைப்பட்ச சுதந்திரப்பிரகடனம் அரசியல் அறிவீனமானசெயல்

## ரெலோ கண்டனம்

(கொழும்பு)

''தமிழ் பேசும் மக்கள் அமைதியை நாடி நிற்கும் இவ்வேளையில் இந்த ஒரு தலைப்பட்சமான சுதந்திர பிரகடனம் ஓர் அரசியல் அறிவீனமான செயல். இதனை எமது இயக்கம் திட்டவட்டமாக நிராகரிப்பதுடன் கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கின்றது.''

இவ்வாறு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) கொழும்பில் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. அதன அரசியல் குழு முக்கியஸ்தர் திரு. இளங்கோ கைச்சாத்திட்டு இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்; ஒரு ஒரு தலைப்பட்சமான சுதந்திர பிரகடனம் என்பது ஒரு சாதாரண அரசியல் விடயமல்ல. சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அமைத்த ஓர் அரசியல் தொடர் நடவடிக்கையின் பூரணத்துவத்தை நோக்கி மக்களின் மனப்பூர்வமான ஆதரவுடன் அவர்கள் வாழும் பிரதேசத்தின் மீதான நடைமுறை ரீதியிலான ஆதிக்கத்துடனும் அதனை பாதுகாக்க கூடிய வலிமையுடனும் மேற்கொள்ளப்பட வேண்டிய அதிவிசேடமானதும் தவிர்க்க முடியாததுமான ஓர் அரசியல் நடவடிக்கையே இத்தகைய பிரகடனமாகும்.

ஆனால் இந்த நிலைமைகள் எதுவுமே இல்லாமல் இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ள பிரகடனமானது ஏதாவது வடிவத்தில் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கு அவ்வரசு கையாண்டிருக்கும் ஓர் தந்திரமாகும்.

அரசியல் சாசன விளைவுகளையும், சர்வதேச ரீதியிலான தாக்கங்களையுமிட்டு எவ்வித அக்கறையுமின்றி இந்நடவடிகளை மேற்கொள்ளப்பட்டிருப்பது அதன் முதிர்ச்சியற்ற நிலையை காட்டுகிறது.

### எதிர்க்கட்சிகள் கண்டனம்

வடக்கு - கிழக்கு மாகாண சபை 'ஈழ ஜனநாயக குடியரசின் தேசிய சட்டமன்றமாக ஒரு தலைப்பட்ச நிலையில் பிரகடனப்படுத்தப்பட்டதை எதிர்க்கட்சிகள் பல வன்மையாக கண்டித்துள்ளன. இது தொடர்பாக அவை தனித்தனி அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளன.

மேற்படி எதிர்ப்பை சுதந்திரக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி, எல். எஸ். எஸ். பி, எம். ஈ பி, என். எஸ். எஸ். பி, ஈ எல். ஜே. பி, எஸ் எல். பி. எவ் உட்பட பல எதிர்க்கட்சிகளும் தெரிவித்துள்ளன.

திரு. வரதராஜப் பெருமாளின் பிரிவினை முயற்சியை உடனடியாக தடுத்து நிறுத்த அரசு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவை அரசிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதன் மூலம் அமைதிப்படையினர் வெளியேறுவதை தடுக்கவே வடக்கு-கிழக்கு மாகாண சபை இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது ஜனநாயக வழிக்குத்திரும்பிவிட்டதாக தம்மை அறிவித்துள்ள கட்சிகள் இவ்வாறு நடந்து கொண்டிருப்பது நாட்டின் இறமையை மீறும் செயலாகும் என்றும் அவை தெரிவித்துள்ளன.

திரு வரதராஜப்பெருமாளின் நடவடிக்கை இலங்கை அரசுக்கு இக்கட்டான நிலை ஒன்றை தோற்றுவித்துள்ளதாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். (சி)

---

### இன்று புலிகளின் கூட்டம்

(மட்டுநகர்)

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் பொதுக்கூட்டம இன்று மாலை மட்டக்களப்பில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் திரு அன்ரன் பாலசிங்கம், திரு. மாத்தயா, திரு. யோகி உட்பட முன்னணியின் பல பிரமுகர்களும் உரையாற்றுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

பாண்டிச்சேரியில்

## இவ்வாரம் அமைச்சரவை பதவியேற்பு இடம்பெறும்!

(சென்னை)

இந்திய மாநிலச் சட்டசபைகளுக்குத் தேர்தல் நடந்து முடிந்த 'மாநிலங்களில் அமைச்சரவை' கள் அமைக்கும் முயற்சிகள் தீவிரமாக நடைபெற்றுவருகின்றன.

பாண்டிச்சேரியில் இவ்வாரம் அமைச்சரவைப் பதவியேற்பு இடம்பெறுமென்று சட்ட சபைத் தலைவர் திரு. டி. இராமச்சந்திரன் பத்திரிகையாளருக்குத் தகவல் தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. கருணாநிதியுடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து ஜனதாதள், தி.மு.க. இணைந்த கூட்டாட்சி இடம்பெறுவது உறுதியாகிவிட்டதென்று பாண்டிச்சேரி ஜனதாதள் தலைவர் திரு.இரா. செழியன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்

இது சம்பந்தமான இறுதி முடிவு நாளை உத்தியோகபூர்வமாக வெளியிடப்படுமென்று அவர் மேலும் தெரிவித்தார்.

மகாராஷ்டிர மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் பதவியேற்கவிருக்கிறது.

ஒரிஸா, ராஜஸ்தான், மத்திய பிரதேஷ், குஜராத்,இமாலய பிரதேசம் ஆகிய மாநிலங்களில், ஜனதாதள், பாரதீய ஜனதா தனித்தும், கூட்டாகவும் ஆட்சிப் பொறுப்பு ஏற்க விருப்பது தெரிந்ததே.

அருணாசலப் பிரதேசத்தில் இதுவரை வெளியிடப்பட்ட 31 தொகுதிகளுக்கான தேர்தல் முடிவுகளில இந்திரா காங்கிரஸ் 20 இடங்களிலும். ஜனதாதள் 5 இடங்களிலும், சுயேட்சை 6 இடங்களிலும் வெற்றிபெற்றுள்ளன.

---


## மரண அறிவித்தல்

### திருமதி ஐயாத்துரை செல்லம்மா

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி செல்லம்மா காலமானர். இவர் ஐயாத்துரையின் அன்பு மனைவியும், பரிபூரணம், கிருஷ்ணசாமி (கிளிநொச்சி), சரஸ்வதி, குணரத்தினம் (நியூ பத்மா கபே - யாழ்ப்பாணம்) பாலரட்ணம் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். ஈமக் கிரியைகள் இன்று (04-03-90) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00மணிக்கு அன்னரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அளவெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றுர், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேம்.

தகவல்:
குணம்,

நியூ பத்மா ஹோட்டல் இந்துக் கல்லூரிச் சந்தி
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (சி 3565)

### ஐயம்பிள்ளை சிற்றம்பலம்

ஊர்காவற்றுறை கரம்பனைப் பிறப்பிடமாகவும் கொழும்பு புதுச்செட்டித்தெரு 12ல் வசிப்பவருமாகிய ஐயம்பிள்ளை சிற்றம்பலம் காலமானர். அன்னர் வீரகத்தி தெய்வானையின் அன்பு மருமகனும் தையலம்மாவின் அன்புக் கணவரும், யோகேஸ்வரி, நந்தகுமார், கேதீஸ்வரி, திலகேஸ்வரி, மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் யோகலிங்கத்தின் அன்பு மாமனரும், நாகம்மர், கந்தையா, வியாலாட்சி, சின்னப்பிள்ளை, பூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் வைத்திலிங்கம், கண்மணி, கந்தையா, சுந்தரி அம்மா, சுப்பிரமணியம், கந்தையா, சின்னையா ஆகியோரின் மைத்துனருமாவார், அன்னரின் ஈமக்கிரியைகள் 5-3-90 திங்கட்கிழமை நயினதீவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றுர், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன்வேண்டுகிறேம்.

(சி–3566) தகவல்: வீ. வைத்திலிங்கம்


---

### திங்கள் முதல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உதவி கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி உயர்கல்வி வகுப்புக்களையுடைய பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இரண்டுநேர பாடசாலைகள் அனைத்திலும் மதிய உணவு வேளைக்கு ஒரு மணித்தியாலம் போக ஆறு மணித்தியாலம் வகுப்புக்கள் நடைபெற வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மதிய உணவு பகல் பன்னிரண்டு மணிக்கே இப்பாடசாலைகளில் வழங்கப்படும்.

மாணவர்கள், விளையாட்டு சாரணியம். கலைசம்பந்தமான நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவதற்கும், ஓய்வு நேரத்தை கல்லூரியில் நடைபெறும் நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி உளவளர்ச்சி பெறுவதற்காகவும் இப்பாடசாலைகள் இருநேர பாடசாலைகளாக மாற்றப்பட்டிருப்பதாக உதவி கல்விப் பணிப்பாளர் 'ஈழநாடு'வுக்கு தெரிவித்தார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையும், பாடசாலை பஸ் சேவையை மாலை 4-30மணிக்கு மாற்றம் செய்துள்ளது. (12)

---

## பெற்றேல் நிலையங்களில் எரிபொருள் பம்புகள் புதிய முறையின்கீழ் சீல்வைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள பெற்றேல் நிலையங்களின் பாவனையிலுள்ள பெற்றேல் வழங்கும் பம்புகளில் பொருத்தப்பட்டிருக்கும் அளவைக் கருவிகளை சீல்இடுவது இது வரையும் பெற்றேலிய கூட்டுத்தாபன அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வந்தது தற்போது இதில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது

புதிய மாற்றத்திற்கமைய சகல பெற்றேல் பம்புகளும், கூட்டுஸ்தாபன அதிகாரிகளும் நிறுத்தல் அளத்தல் திணைக்கள அதிகாரிகளும் கூட்டாக இணைந்து சீல்வைப்பார்கள்.

இத்திட்டம் விரைவில் சகல பெற்றேல் நிலையங்களிலும் செயல்படுத்தப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். [12]

---

### நாம் தற்போது

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளோம். மே மாதம் 5ம் திகதி சந்தித்து, அதற்கான அரசு அமைப்பு ஒன்றை வரையவுமுள்ளோம்.''

இவ்வாறு வடக்கு-கிழக்கு மாகாண சபை முன்னுள் முதல்வர் திரு. வரதராஜப் பெருமாள் தெரிவித்துள்ளார் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

''இந்தப் புதிய பிரகடனத்தால் இப்பகுதியிலுள்ள சிங்கள மக்கள் பயப்படத் தேவையில்லை. அவர்களின் பாதுகாப்பை நாம் உறுதிப்படுத்துவோம்'' என்றுர்.

அமைதிப்படை வெளியேறும் போது நீங்களும் இலங்கையிலிருந்து வெளியேறிவிடுவீர்கள் எனப் பேசப்படுகிறதே? எனக் கேட்டபோது; ''நான் எங்கும் போவேன், அது எனது கட்சியின் தலைமைப் பீடத்தின் உத்தரவைப் பொறுத்தது. வெளிநாடுகளுக்குச் சென்று, இது தொடர்பாகப் பிரசாரம் செய்யுமாறு உத்தரவிட்டால் சகல நாடுகளுக்கும் செல்வேன் அல்லது ஆயுதப் பிரிவுக்குப் பொறுப்பாக இருக்குமாறு கூறினல் அதனையும் செய்வேன்'' என்றுர். (சி)

---

### வடக்கு-கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வியாழக்கிழமை வடக்கு-கிழக்கு மாகாணசபை ஈழ ஜனநாயகக் குடியரசின் தேசிய சட்டமன்றமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதை அடுத்தே எதிர்க கட்சியான முஸ்லிம் காங்கிரஸ் மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

தேவையேற்படும் பட்சத்தில் முஸ்லீம் காங்கிரஸ் பிரதிநிதிகள் வடக்கு-கிழக்கு மாகாண சபை ஆளுநர் ஜெனரல் நளின் செனிவிரத்னவைச் சந்திப்பர் என்றும் கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

முதல்வர் வரதராஜப்பெருமாளின் அறிவிப்பைத் தாம் ஏற்கவில்லை என்றும், இலங்கையின் ஒருமைப்பாட்டின் கீழேயே எந்தவொரு பிரச்னைக்கும் தீர்வு காணவேண்டுமென்றும் கட்சியின் தலைவர் ஜனப் எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார். (சி)

---

### ஆயுதங்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

---

### அகதிகள் கி ூஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளை சேர்ந்த 48 ஆண்களும், ஆறு பெண்களும் அடங்குவர் என்று அறியப்படுகிறது.

---

### யாழ்ப்பாணத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். இவர்களது நல் வாழ்வுக்கு தமிழ் மண்ணை நேசிப்பவர்கள் அனைவரும் அறிவுரை நல்கி தேச விடுதலையை ஊட்டவேண்டுமென்றுர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அவைத் தலைவர் கே. சிவபாலன் உரையாற்றுகையில், ''இன்று விடுவிக்கப்படுபவர்கள் தெரிந்தோ தெரியாமலோ துரோகிகளுடன் சேர்த்து செயல்பட்டவர்கள், கலாசாரசீர்கேடுகளுக்கு துணை போனவர்கள் தவருன பழக்க வழக்கமுடையவர்கள். இவர்கள் தாமாகவே திருந்திக் கொள்ளவேண்டும். இன்று மனிதாபிமானத்துடன் விடுதலை செய்கின்றேம், பின்னர் இப்படியான ஒரு நிலையை அவர்கள் உருவாக்கினுல் அது அவர்களை இந்தமண்ணில் மன்னிக்க முடியாத குற்றம் செய்தவர்களாக நாம் செயல்பட தூண்டும்'' என்றுர்.

இவ் வைபவத்தில் எஸ். செல்வநாயகம், கே. கிறிஸ்தி உட்பட பலர் உரையாற்றினர். வைபவ முடிவில் எண்பத்தெட்டு இளைஞர்களும் பெற்றேரிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கான மக்கள் இந்த இளைஞர்களைக்காண ஆர்வமுடன் குழுமியிருந்தனர். [12]

---

### அமைதிப்படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கும், பாதுகாப்புக்கும் குந்தகம் ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைக்காகப் பயன்படுத்துவதைத் தடுக்க எல்லாவித நடவடிக்கைகளும் எடுப்பதாக இந்தியா உறுதி வழங்கியுள்ளதையும் இலங்கை அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

மேற்படி கடமைகளை இந்தியா மீறுது நடந்துகொள்ளும் என்று இலங்கை அரசு நம்புவதாகவும் பி. பி. ஸீ. தெரிவித்தது.

இதேவேளை, இந்த நெருக்கடி நிலையைத் தீர்க்கும் விதத்தில் இலங்கை அரசு அதிகாரிகள், சட்ட வல்லுநர்களுடன் கடந்த இரு தினங்கள் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளனர். (சி)

---

### மருந்துகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களை விற்றுவருகின்றனர் எனப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய போலி ஏஜண்டுகள் புது வாகனங்களைப் பாவிதது, தாம் விற்பனைசெய்யும் மருந்து வகைகளைப் புது விதமான சக்தி வாய்ந்த உன்னத தயாரிப்புக்கள் எனக் கூறி அவற்றைக் கொடுத்து விற்பனையாளர்களை ஏமாற்றிவருகின்றனராம்.

இவ்விதமான புகார்கள், யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கததிற்குக் கிடைத்துள்ளதாகத் தெரிவித்த சங்கச் செயலாளர் திரு. சி. ஸ்ரீ.கணேசன், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களைத் தவிர்ந்த ஏனைய எந்த நிறுவனத்திடமும மருந்து வகைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடாதெனவும், போலி ஏஜண்டுகளை இனம் கண்டு கொள்ளுமாறும் அறிவுறுத்தியுள்ளார் (56)

---

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு பங்குனி மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81. Eelanadu P. O Box No. 49. Telegram: Eelanadu. Telephone: 2291,